# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



**தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல,
பெலத்திலே உண்டாயிருக்கிறது**

I கொரிந்தியர் 4:20


TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

March - April 2022 ஆண்டு சந்தா ₹ 100/-

Volume : 62 Issue : 2

# வாழ்த்துக்கள்

## Congratulations



அகில இந்திய தேவ சங்க சபைகளின் பொது தலைவராக ஊழியம் செய்யும், **சங்கை.D.மோகன்** அவர்களை மனமார வாழ்த்துகிறோம்! இப்போது **அகில உலக தேவசங்க திருச்சபைகளின் செயல் தலைவராக** நியமனம் செய்யப்பட்டுள்ளார்!

தேவ சங்க திருச்சபையானது 1914-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ஆர்கன்சாஸ் என்ற மாநிலத்தில், ஹாட் ஸ்ப்ரிங்க்ஸ் என்ற பட்டணத்தில் ஆரம்பமானது. அதில் 300 ஊழியர்களும் விசுவாசிகளும் கலந்து கொண்டார்கள். இந்த நாட்களில் அது உலகெங்கிலும் ஏறத்தாழ 200 தேசங்களில் 6 கோடி விசுவாசிகளுக்கு மேலே உள்ள மாபெரும் பெந்தெகொஸ்தே திருச்சபையாக வளர்ந்துள்ளது. 2022ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதியன்று, அகில உலக தேவ சங்க திருச்சபையின் பொது தலைவராக இருந்த டாக்டர் ஜார்ஜ் வுட் அவர்கள் கர்த்தருடைய ராஜ்யத்தில் பிரவேசித்தார். அதைத் தொடர்ந்து உதவி தலைவராக பணியாற்றி வந்த சங்கை D.மோகன் அவர்கள் சர்வதேச அளவில் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழ் நாட்டில் ஒரு கிராமத்தில் பிறந்து, உலக தலைவராக உயர்ந்திருப்பது, தமிழக திருச்சபைகளுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், விசேஷமாக தேவசங்க திருச்சபை ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் மிகவும் மகிழ்ச்சியான செய்தியே!

இந்த எழுப்புதலின் பத்தாண்டில், தேவசங்க தமிழ் திருச்சபைகளில் ஆரம்பிக்கும் எழுப்புதலானது, இந்தியா மற்றும் உலக முழுவதிலும் காட்டுத் தீயாகப் பரவட்டும்! இந்த சூழ்நிலையில் இந்த மாபெரும் ஊழிய பொறுப்பை ஏற்றிருக்கும் பாஸ்டர்.D.மோகன் அவர்களோடு ஊழியம் செய்யும் செயற்குழு அங்கத்தினர்களும் மற்றவர்களும் அவரோடு ஒருமனமாய் ஊழியம் செய்யவும், நமது போதகர் மிகுந்த ஞானமாய் இந்த ஊழியத்தை நிறைவேற்றவும், நாம் எல்லாரும் அவரை ஊக்கமாய் ஜெபத்தில் தாங்குவோமாக!

ஆசிரியரிடமிருந்து........!



# வல்லமை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வு

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களுக்கு இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள்!

நமது ஆண்டவராகிய இயேசு இந்த பூமியில் இருந்தபோது அவருடைய வாழ்வு வல்லமை நிறைந்ததாய் இருந்தது. இயேசுவில் இருந்த வல்லமையைப் பற்றி கூறும் சில வசனங்களை லூக்கா சுவிசேஷத்தில் காண முடியும். "பின்பு இயேசு ஆவியானவருடைய **வல்லமையினாலே** கலிலேயாவுக்கு திரும்பி போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று' (லூக்கா 4:14). "எல்லாரும் ஆச்சரியப்பட்டு இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் **வல்லமையோடும்** அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்" (லூக்கா 4:36). "பின்பு ஒரு நாள் அவர் உபதேசித்துக் கொண்டிருந்தபோது பிணியாளிகளை குணமாக்கத்தக்கக் கர்த்தருடைய **வல்லமை** விளங்கிற்று" (லூக்கா 5:17). "அவரிடத்திலிருந்து **வல்லமை** புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படி வகைத்தேடினார்கள்" (லூக்கா 6:19; 8:46).

இந்த வல்லமை இயேசுவுடனே முடிந்துவிடவில்லை. இயேசுவின் சீடர்கள் இதே வல்லமையுடன் வாழ்ந்தனர் (லூக்கா 9:1;10:19; ரோமர் 15:18; 1கொரி.2:5). ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் இருந்தான் என்று வேதம் கூறுகிறது(அப்.6:8). வல்லமையற்ற நிலையை உதறி தள்ளுவதே கிறிஸ்தவ வாழ்வின் அழைப்பாகும் (2தீமோ.3:5). இயேசு தேவ வல்லமையால் நிறைந்தவராய் வாழ்ந்தது போல நாமும் அதேவல்லமையால் நிரப்பப்பட வேண்டும் (2கொரி.13:4). அவரை விசுவாசிக்கிற நமக்கு அவருடைய அளவிடமுடியாத தேவத்துவத்தின் வல்லமையை அருளும்படியாகவே கர்த்தர் விரும்புகிறார் (எபே.1:19,20). ஏனெனில் "தேவனுடைய இராஜ்யம் பேச்சிலே அல்ல; மாறாக அது தேவவல்லமையால் நிறைந்து வாழ்வதில் இருக்கிறது" (1கொரி.4:20). வல்லமை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வு வாழ வேதம் கூறும் வழிகளை சுருக்கமாக கீழே காண்போம்.

## 1. வேத வார்த்தை மூலம் வல்லமை (SCRIPTURES)

தேவனுடைய வல்லமை நிறைந்த களஞ்சியம் அவருடைய வார்த்தைகளடங்கிய பரிசுத்த வேதாகமம் ஆகும். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளது (எபி.4:12). ஊட்டச்சத்து மிக்க உணவை உண்ணும்போது எப்படி உடல் வலிமை பெறுகிறதோ, அதே போல தேவனுடைய வார்த்தையை வாசித்து, தியானித்து,

உட்கொள்ளும்போது நமது ஆவிக்குரிய வாழ்வு வல்லமை பெறுகிறது. தேவனுடைய வார்த்தை நம்மை பரிசுத்தமாக்க வல்லமையுள்ளது (சங்.119:9,11; எபே.5:25,26), விசுவாசத்தை பெருகச் செய்ய வல்லமையுள்ளது (ரோமர் 10:17). அது நம்மை ஞானவான்களாய் மாற்றவும் (சங்.19:7;119:130), சமாதானத்தை அருளவும் (சங்.119:165), மகிழ்ச்சியைத் தரவும் வல்லமையுள்ளது (எரே.15:16), தேவ வல்லமை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வையும், ஊழியத்தையும் விரும்பும் ஒவ்வொருவரும் தேவ வார்த்தையை இடைவிடாது உட்கொள்ள வேண்டும் (மத்.4:4) மற்றும் அதற்கு கீழ்ப்படிய அர்ப்பணிக்க வேண்டும் (யாக்.1:22).

## 2. ஜெபத்தின் மூலம் வல்லமை (SUPPLICATION)

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் வல்லமையுடையது (யாக்.5:16). ஜெபம் ஆற்றல் மிக்க வல்லமையான ஆயுதம். நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே உங்களுக்கு சித்திக்கிறதில்லை (யாக்.4:2) என்ற யாக்கோபின் வார்த்தைகள் வல்லமையற்ற பரிதாபத்திற்குரிய வாழ்க்கை வாழும் ஒரு சராசரி கிறிஸ்தவனைப் பற்றி விவரிக்கிறது. சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து, 'ஏன் எங்களால் பிசாசை துரத்திவிடக்கூடாமற்போயிற்று என்று கேட்டதற்கு, ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி இவ்வகை பிசாசு புறப்பட்டு போகாது' என்றார் (மாற்கு 9:28,29). ஜெபமும் உபவாசமும் நம் வாழ்வின் பழக்கமாக மாறும்போது நம்வாழ்வில் நிச்சயம் வல்லமை வெளிப்படும் (அப்.3:1-5). இயேசு இந்த உலகில் வாழ்ந்த நாட்களில் பிதாவோடு ஜெபத்தில் அதிக நேரம் செலவிட்டார். நாமும் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும், சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும், விழித்திருந்து ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார் (லூக்கா 18:1; 21:36; 11:1-13). ஒழுங்கும் கிரமமுமாக ஜெபிக்க தீர்மானிப்போம். புதுபெலன் பெற்று கர்த்தருக்காக பிரகாசிப்போம் (தானி.6:10; ஏசாயா 41:31). "அதிக ஜெபம்-அதிக வல்லமை; குறைந்த ஜெபம்-குறைந்த வல்லமை; ஜெபமின்மை-வல்லமையின்மை" ("More Prayer-More Power; Less Prayer-Less Power; No Prayer-No Power") என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையான கூற்று அல்லவா?

## 3. துதியின் மூலம் வல்லமை (SINGING PRAISES)

பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அதிர்ந்தது. கதவுகளெல்லாம் திறவுண்டது. கட்டுகள் கழன்று போயிற்று (அப்.16:25,26). துதிக்கும் இடத்தில் தேவன் வாசம்பண்ணுகிறார் (சங். 22:3). அங்கு அற்புதங்கள் நடக்கும் (அப்.16:26), மகிழ்ச்சி உண்டாகும் (சங்.16:11), தடைகள் விலகும் (யோசுவா 6:20), சத்துரு முறியடிக்கப்படுவான் (2 நாளா.20:22). தாவீதைப் போல கர்த்தரை எக்காலத்திலும் துதிக்கபழகுவோம் (சங்.34:1). அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்துவோம் (எபி.13:15). எக்காலத்திலும், எப்போதும், எல்லாவற்றிலேயும் துதிக்கும் ஒரு மனிதனை தேவன் தம்முடைய பிரசன்னத்தினாலும் வல்லமையாலும் நிரப்புவார்!

## 4. பரிசுத்த ஆவியானவர் மூலம் வல்லமை (SPIRIT OF GOD)

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன் (வல்லமை) அடைவீர்கள் என்று இயேசு கூறினார் (அப்.1:8). இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும்

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் நிறைவையும் பெற்றுக்கொள்ள வேண்டும் (எபே.5:18). பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்ற கிறிஸ்தவர்கள்தான் வல்லமையான சாட்சிகளாக மாற முடியும். பரிசுத்த ஆவியானவர் பாவத்தின் மேல் வெற்றி பெற நமக்கு உதவி செய்கிறார் (கலா.5:16).ஆவியின் கனிகளை நமக்குள் உருவாக்கி இயேசுவை உலகத்திற்கு பிரதிபலிக்க நமக்கு உதவி செய்கிறார் (கலா.5:22,23). மேலும் நற்செய்தி அறிவிக்க அசாதாரண தைரியத்தையும் வரங்களையும் அருளுகிறார் (அப்.4:31; ரோமர் 1: 16; 1 கொரி. 12:7-11). பாவம், பிசாசு, வியாதியினால் கட்டுண்டோரை விடுவிக்க ஆவியானவர் நமக்கு வல்லமையையும் அதிகாரத்தையும் அருளுகிறார் (லூக்கா 4:18; அப்.10:38)! சுவிசேஷம் அறிவிக்க புறப்பட்டுப் போங்கள். கர்த்தர் உங்களை கொண்டு பலத்த, வல்லமையான கிரியைகளை நடப்பிப்பார். உங்கள் கண்கள் காணும். நீங்கள் தேவனை மகிமைப் படுத்துவீர்கள் (மாற்கு 16:20; ரோமர் 15:18).

## 5. பாடுகள் மூலம் வல்லமை (SUFFERING)

கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன் என்று பவுல் கூறுகிறார் (2 கொரி.12:9). கிறிஸ்துவுக்காக பாடுகள் சகிக்க ஆயத்தமாக இல்லாத பட்சத்தில் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை நாம் அநுபவிக்க முடியாது (பிலி.3:10). கிறிஸ்துவினிமித்தம் வரும் துன்பங்கள், நெருக்கங்கள், நிந்தைகளை நாம் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும்போது, தேவவல்லமை நம் வாழ்வில் வெளிப்படுவதை நாம் காண முடியும் (2 கொரி.12:10; 6:4-10; தானி.3:25-38; 6:22-26)!

## 6. ஒப்புக்கொடுத்தல் மூலம் வல்லமை (SURRENDERED LIFE)

உங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 6:13). வல்லமை நிறைந்த வாழ்வு பெறுவதற்கான மாபெரும் மற்றும் முக்கியமான இரகசியம் தேவனிடத்தில் சரணடைதல் அல்லது ஒப்புக்கொடுத்தல் ஆகும். ஒப்புக்கொடுத்தல் என்பது 'ஒருவரிடம் தன்னை முழுமையாக விட்டுக்கொடுத்தல்' என்று பொருள்படும். நாம் நம்மைத் தேவனுக்கு முழுமையாக விட்டுக்கொடுக்க வேண்டும். அதாவது நம்மை தேவனுக்கு உரிமையான சொத்தாகவும், அவர் தம் விருப்பப்படி நமக்குச் செய்யவும், நம்மை உபயோகிக்கவும் முற்றிலும் அர்ப்பணிக்க வேண்டும். 'இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை; உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது (லூக்கா 1:38) என்று தன்னை ஒப்புக்கொடுத்த மரியாளை எல்லா சந்ததிகளும் அவளை பாக்கியவதி என்று சொல்லத்தக்க ஆசீர்வதித்து பயன்படுத்தினார். பவுல், ஸ்தேவான், பேதுரு போன்ற தேவ மனிதர்களின் நூறு சதவீத ஒப்புக்கொடுத்தல் தேவனுடைய கரத்தில் அவர்களை வல்லமையான கருவிகளாக மாற்றியது (அப்.5:29; 6:8; 9:6). நாமும் தேவசித்தம் செய்ய தேவ கரத்தில் நூற்றுக்கு நூறு முழுமையாக ஒப்புக்கொடுப்போம்! தேவ வல்லமையோடு வாழுவோம்! ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 18.இயேசுகிறிஸ்துவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது

தொடர்ச்சி

### அன்று

உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்.24:42,44) என்று இயேசு சொன்னதை கேட்டிருந்த அப்போஸ்தலர் தங்கள் காலத்திலேயே இயேசு வருவார் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

### கீழ்காணும் வசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். (1கொரிந்தியர் 15:51, 52).

கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூடஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.

ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள் (1தெச. 4:15-18).

மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது.

அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது.

அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங் கூட நம்முடைய சரீரமீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம் (ரோமர் 8:19-23).

கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமடஎன்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம்.

இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.

தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும்; புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.

ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2பேதுரு 3:10-14).

இயேசு கிறிஸ்துவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆதிசபையார் நற்செய்தியை உலகமெங்கும் பரப்பினார்கள். பரிசுத்தமாய் வாழ கவனம் செலுத்தினர். இயேசுவின் வருகைக்கு முன் நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்கள் இருந்தன என்பதை அவர்கள் அன்று தெளிவாய் விளங்கிக் கொள்ளவில்லை.

**இன்று**

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன் நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறி விட்ட ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எந்த நேரத்திலும் வரலாம் என்று எதிர்பார்த்திருக்க வேண்டிய காலம் இது. ஆனால் இந்த உணர்வே இல்லாதிருக்கின்ற கிறிஸ்தவர்கள் இன்று ஏராளமுண்டு. இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய செய்திகளை போதகர்கள் பிரசங்கிப்பது மிக குறைந்துவிட்டது. இப்போது செழுமை உபதேசமும், இந்த உலக வாழ்க்கையில் என்னென்ன ஆசீர்வாதங்களைப் பெற்று சொகுசான வாழ்க்கை வாழ்வதற்கான போதனைகள் பெருகிவிட்டன.

எனவே விசுவாசிகள் இன்று இயேசுவின் வருகையை எதிர்பார்த்து வாழ்வது போல காணப்படவில்லை. நற்செய்திப்பணி வேகமாய் நடைபெறவில்லை. பரிசுத்த வாழ்க்கையைப் பற்றிய எச்சரிப்பின் செய்தி அதிகமில்லை. இயேசு எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். அனுபவிராஜா! என்ற மனப்பான்மையில் சபை சென்று கொண்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து பரிசுத்தமாய் வாழவும், எச்சரிப்பாய் நடக்கவும், உலகமெங்கும் நற்செய்தி பரப்பவும் ஊக்கமாய் செயல்படுவோமாக.

- தொடரும்



# புருஷர்களே, எழும்புங்கள்!


## Rev. I. கிறிஸ்துதாஸ்

மூத்த போதகர், ஹோப் ஏஜி சர்ச், பள்ளிக்கரணை
Committee Member, Tamil District Council of SIAG


ஆண்டவருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.

திருச்சபையிலிருக்கும் பிரியமான புருஷர்களே! நாம் ஒரு கொடியகாலத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். பல இழப்புகள், பல பாடுகள், பல நெருக்கங்கள் இவைகளை நம்மில் அநேகர் சந்தித்து இருக்கிறோம். நாம் நிற்பதும், நிர்மூலமாகாமல் இருப்பதும் தேவனுடைய கிருபையே. வியாதிகள் வந்து போகும், கஷ்டங்கள் வந்து போகும், பிரச்சனைகள் வந்து போகும், போராட்டங்கள் வந்து போகும், உபத்திரவங்களும் வந்துபோகும், ஆனால் தேவராஜ்யம் நிலைத்து நிற்கும். தானியேல் தீர்க்கதரிசன புஸ்தகத்தில் யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும் நம்மை காக்கிறவர் உறங்கார். நாம் எல்லா சூழ்நிலைகளிலும் சுவிசேஷத்தை சொல்ல வேண்டும். சூழ்நிலையைப் பார்த்து சோர்ந்து போகக்கூடாது.

இந்த சுவிசேஷத்தை சொல்ல ஆதித்திருச்சபையிலுள்ள புருஷர்களைப் போல உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருக்க வேண்டும். வசனம் விருத்தியடைந்தது, சீஷர்களுடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று என்று பார்க்கிறோம்.

நாங்கள் அலங்கத்தைக் கட்டிவந்தோம் அலங்கமெல்லாம் பாதிமட்டும் ஒன்றாய் இணைந்து உயர்ந்தது. ஜனங்கள் வேலை செய்கிறதற்கு ஆவலாயிருந்தார்கள் (நெகேமியா 4:6).

ஆண்டவருடைய வேலைகளை செய்கிறதற்கு ஜனங்கள் ஆவலாய் இருந்தார்கள் என்று பார்க்கிறோம். அதேபோல தேவனுடைய சுவிசேஷத்தை சொல்ல நீங்களும் ஆவலாய் இருங்கள். இயேசு கிறிஸ்து நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று சொல்லியிருக்கிறார்.

- இயேசுவுக்காக புறப்படுங்கள்,

இயேசு அவனுக்கு உத்தரவுகொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார் (மாற்கு 5:19).

- இனத்தாரிடத்தில் செல்லுங்கள்,
- வீட்டாரிடத்தில் செல்லுங்கள்,
- எதிர்வீட்டுக்குச் செல்லுங்கள்,

உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள் அதில் பிரவேசித்த வுடனே, மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள் (மாற்கு 11:2).

- எதிரே இருக்கும் கிராமத்துக்குப் போங்கள்.
- எதிரே இருக்கிற பட்டணத்துக்கு செல்லுங்கள்.

அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது

(லூக்கா 24:47) என்பதை வாசித்துப்பாருங்கள். கூப்பிடுகிற காக்கை குஞ்சுகளுக்கு ஆகாரத்தை கொடுக்கிறவர், மாட்டுக்கு புல்லை கொடுக்கிறவர், கருப்பையிலே நமக்குத் தேவையான ஆகாரத்தை கொடுக்கிறவர். நம்முடைய தேவைகளை சந்திக்கமாட்டாரா!

பிரியமானவர்களே! இயேசுவை அறிந்த அந்திரேயா தன் சகோதரன் பேதுருவை இயேசுவண்டை கூட்டிக்கொண்டு வரவில்லையா? பேதுரு திரளான ஜனங்களை கர்த்தரிடத்தில் நடத்தவில்லையா? இயேசுவை அறிந்த பிலிப்பு நாத்தான்வேலை அழைத்துக்கொண்டு வரவில்லையா? இயேசுவை அறிந்த பர்னபா, எங்கேயோ அலைந்து கொண்டிருந்த பவுலை அந்தியோகியா சபையிலே சேர்க்கவில்லையா? கிறிஸ்துவுக்காக பாடுபடுங்கள்.

கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள் (எபேசியர் 5:2).

அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களையும், மடிந்து கொண்டிருக்கிற மனுக்குலத்தையும் நேசியுங்கள். கிறிஸ்துவுக்காக பாடுபடுங்கள். அப்போஸ்தலனாகிய பவுலைப்போன்று கிறிஸ்துவின் சுவிசேஷத்தை குறித்து நான் வெட்கப்படேன் என்று சொல்லுங்கள். பரிசுத்த பவுல் சுவிசேஷத்தினிமித்தம் சிறைச்சாலையில் இருந்தார். அநேக அடிகள் அவரை அடித்தார்கள். சூழ்நிலைகளை பார்க்கவில்லை. வேதனைகளை பார்க்கவில்லை. நடுராத்திரியில் சிறைச்சாலையில் பவுலும் சீலாவும் தேவனைத் துதித்தார்கள். அஸ்திபாரங்கள் அசைந்தது. தேவ வல்லமை வெளிப்பட்டது. ஆண்டவன்மாரே இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். நடுராத்திரியிலே இரட்சிப்பைக் குறித்து பவுல் பிரசங்கம் பண்ணினார்.

அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள் (அப்போஸ்தலர் 16:32).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொன்னார். அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்.

மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்போஸ்தலர் 16:33)

சுவிசேஷத்தைக் கேட்ட சிறைச்சாலைக்காரன் தன் வீட்டார் அனைவரோடுங் கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பிரியமானவர்களே, போராட்டமான காலங்களில் கூட நமது ஆண்டவர் பெரியக் காரியங்களைச் செய்யவில்லையா? புருஷர்களே! எழும்புங்கள் ....கர்த்தருக்காக செயல்படுங்கள். உங்கள் அக்கம் பக்கம் உள்ளவர்கள், உங்கள் நண்பர்கள், அடிக்கடி உங்களை தொடர்பு கொள்ளுகிறவர்கள் என எல்லாருக்கும் இயேசுகிறிஸ்துவை சொல்லுங்கள். அதற்கேற்ற பலனை கர்த்தர் உங்களுக்கு தருவார். அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போல சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# A.G. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி

(An ATA Accredited College)

மதுரை - 625 016

Email : agtbc1948madurai@gmail.com Website : www.agtbc.org

## I. Residential Studies

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years

**Eligibility :** Any Degree from Recognized University (10+2+3)

B.Th Degree (ATA Accredited) or its equivalent

### 2. Bachelor of Theology (B.Th.,)

**Medium** : English and Tamil | **Duration** : 3 Years

**Eligibility** : +2 Pass (10+2)

### 3. Diploma in Theology (Dip.Th) (For Men)

**Medium** : Tamil | **Duration** : 2 Years

Eligibility: S.S.L.C. (X Pass)

## II. Modular Studies

### 1. Master of Divinity (M.Div)

**Medium** : English | **Duration** : 3 Years (For Men and Women)

Eligibility: Any Degree from Recognized University (10+2+3)

B.Th Degree (ATA Accredited) or its equivalent

Men must be above 25 years. Women must have been married

### 2. Bachelor of Theology (B.Th) (For Men and Women)

**Medium** : Tamil | **Duration** : 3 Years

Eligibility: S.S.L.C. and Diploma in Theology (10+Dip.Th) (Only for Pastors)

## III. Extension Studies

### 1. Diploma in Theology (Dip.Th) (For Men and Women)

**Medium** : Tamil | **Duration** : 2 Years

Eligibility: S.S.L.C. (X Pass)

கி.பி.2022-23-க்கான நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவம் வரவேற்கப்படுகின்றன.
ஜூன் 2022-ல் கல்லூரி வகுப்புகள் தொடங்கும்.

விண்ணப்ப படிவத்திற்கு

**Download Application Form : www.agtbc.org**

தொடர்பு:

*Director of Academics*

**AG Tamilnadu Bible College**

**Post Box-1, Bye Pass Road, Madurai - 625 016.**

**Cell : 96982 55027, 94430 70974, Ph: 0452 2601940.**



# நியாயாதிபதிகளின் புத்தகம்
# Book of Judges

புத்தக அறிமுகம்


**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University


நியாயாதிபதிகளின் புத்தகத்தை எழுதியவர் சாமுவேல் என்பது பாரம்பரிய நம்பிக்கை. மோசே, இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுதலை செய்து வெளியே கொண்டு வந்தான். யோசுவா அவர்களைக் கானானுக்குள் நடத்திச்சென்றான். யோசுவாவின் மரணத்துக்குப்பின் இஸ்ரவேலரின் வாழ்க்கையில் நடந்தது என்னவென்றும், அவர்களது விசுவாசத்துரோகம் பற்றியும், அதனால் ஏற்பட்ட கேடான விளைவுகள் என்னவென்றும் **நியாயாதிபதிகள் 2:7-19ல்** மிகத்தெளிவாகப் பார்க்கிறோம்.

**இதனையே இப்புத்தகத்தின் பின்னணியாகவும் எடுத்துக்கொள்ளலாம்:**

2:7.யோசுவாவின் சகல நாட்களிலும் கர்த்தர் இஸ்ரவேலுக்காகச் செய்த அவருடைய பெரிய கிரியைகளையெல்லாம் கண்டவர்களும், யோசுவாவுக்குப் பின்பு உயிரோடிருந்தவர்களுமாகிய மூப்பரின் சகல நாட்களிலும் ஜனங்கள் கர்த்தரைச் சேவித்தார்கள். 8.நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் கர்த்தரின் ஊழியக்காரன் நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரணமடைந்தான். 10.அக்காலத்திலே இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று. 11.அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து, 12.தங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின அவர்களுடைய தேவனாகிய கர்த்தரைவிட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போய், அவர்களை பணிந்துக்கொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள். 13.அவர்கள் கர்த்தரை விட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள்.14.அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி, அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார். 15. கர்த்தர் சொல்லியபடியும், கர்த்தர் அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியும், அவர்கள் புறப்பட்டுப்போகிற இடமெல்லாம் கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருந்தது; மிகவும் நெருக்கப்பட்டார்கள். 16.கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடு கிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள். 17.அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக்கேளாமல், அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய், அவைகளைப் பணிந்துக்கொண்டார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போனார்கள். 18.கர்த்தர் அவர்களுக்கு நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணுகிறபோது, கர்த்தர் நியாயாதிபதியோடேகூட இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிளெல்லாம் அவர்கள் தங்களை இறுகப்பிடித்து ஒடுக்குகிறவர்களினிமித்தம் தவிக்கிறதினாலே, கர்த்தர் மனஸ்தாபப்படுவார். 19.நியாயாதிபதி மரணமடைந்த உடனே, அவர்கள் திரும்பி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவும் சேவிக்கவும் பணிந்துகொள்ளவும், தங்கள் பிதாக்களைப்பார்க்கிலும் கேடாய் நடந்து, தங்கள் கிர்த்தியங்களையும் தங்கள் முரட்டாட்டமான வழியையும் விடாதிருப்பார்கள்.

(மேலே தரப்பட்டுள்ள வேதபகுதியை வாசித்துவிட்டு, இக்கட்டுரையினைத் தொடரக் கேட்கிறோம்)

**யார் இந்த நியாயாதிபதிகள்?:** ஜனங்களுடைய வழக்குகளை விசாரித்து, அவர்களை வழிநடத்தும் தலைவர்களாக செயல்பட்டது மட்டுமல்லாது, இஸ்ரவேலருக்காக யுத்தங்களை நடத்தும் படைதளபதிகளாகவும் செயல்பட்டனர் (2:16).

**நியாயாதிபதிகளின் காலம்:** (கி.மு.1375-1050) அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான் (21:25) என்ற வசனமும் இக்கால நிலைமையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஒவ்வொருமுறையும் ஒரு நியாயாதிபதியின் காலம் முடியும்போது, இஸ்ரவேலர் கர்த்தரைவிட்டு, விக்கிரகங்களைச் சேவித்து, தங்கள் பாவ வாழ்க்கைக்குத் திரும்பினர். இஸ்ரவேலர் கிளர்ச்சி செய்த சுழற்சிகளை கீழ்கண்டவாறு சித்தரிக்கலாம்:

**கிளர்ச்சி சுழற்சி: Cycle of Rebellion**

**நியாயாதிபதிகளின் புஸ்தகப் பொருளடக்கம்:**

இப்புத்தகத்தில் மொத்தமுள்ள 21 அதிகாரங்களையும் மூன்று பிரிவுகளாகப் பகுத்துப் படிக்கலாம்.

1.முதல் மூன்று அதிகாரங்கள் (1:1-3:7) கீழ்காணும் முக்கிய நிகழ்வுகளையும், அதனால் இஸ்ரவேல் தேசம் சந்தித்த பெரும் சவால்களையும் இப்பகுதியில் பார்க்கிறோம்.

- **யோசுவாவின் மரணம்:** எகிப்திலிருந்து வாக்குத்தத்த தேசமாகிய கானானுக்குப் பயணம் செய்த இஸ்ரவேலரில் முதல் சந்ததியினரை வழிநடத்த மோசேயும், அதற்கடுத்த சந்ததியினரை நடத்திச்செல்ல யோசுவாவும் இருந்தனர். இந்த இரண்டு தலைவர்களுக்குக் கீழ்படிந்து, மக்கள் நடந்தபோது தேவன் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து, தம்முடைய பாதுகாப்பும் பராமரிப்பும் எப்போதும் அவர்களுக்கு உண்டு என்பதை இதன்மூலம் விளங்கச் செய்தார்.

ஆனால் யோசுவாவின் மரணத்திற்குப் பின்பு, அவனைத் தொடர்ந்து இஸ்ரவேலரை நடத்திச் செல்ல இன்னொரு தலைவனைக் கர்த்தர் ஏற்படுத்தவில்லை. இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தர் கொடுத்த உடன்படிக்கையின் நியாயப்பிரமாணங்கள் அனைத்தையும் கைக்கொண்டு நடக்கவேண்டும் என்பதுதான் தேவனுடைய எதிர்ப்பாயிருந்தது.

- **தோரா என்ற நியாயப்பிரமாணம் மறக்கப்பட்டுப் போயிற்று:**

யோசுவாவின் காலத்திலிருந்த சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்ட பின்பு, கர்த்தரையும் அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியைகளையும், நியாயப்பிரமாணத்தையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று (2:10).

- **இஸ்ரவேலரின் நடுவில் குடியிருந்த புறஜாதிய ஜனங்கள்:**

யோசுவா, கானானின் பெரும்பகுதியை வென்றெடுத்திருந்தாலும், புறஜாதிகள் பலர் இன்னும் இஸ்ரவேலர் நடுவில் வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் தங்கள் தங்கள் பட்டணங்களில் குடியிருந்து, தங்கள் கலாச்சாரத்தையும், மார்க்கப் பழக்கவழக்கங்களையும் விடாதிருந்தனர். இஸ்ரவேலர் கானானுக்கு வந்து, அவர்களுடன் குடியிருக்கையில், பிரதானமாகக்

கலப்புத் திருமணத்தின் மூலமும், விக்கிரக ஆராதனையின் மூலமும் அவர்களுடன் கலந்துவிட்டனர். கர்த்தருக்கு உண்மையாய் வாழவில்லை.

2. அதிகாரங்கள் 3-16: இஸ்ரவேலர் பாவத்தில் விழுந்ததினால் எப்படி அடிமைத்தனத்தில் அவதியுற்றனர் என்றும், 12 நியாயாதிபதிகள் அவ்வப்போது எழும்பி அவர்களை எப்படி விடுவித்தனர் என்றும் இப்பகுதி நமக்குச் சொல்லுகிறது.

இந்த 12 நியாயாதிபதிகளையும் முந்தைய நியாயாதிபதிகள், பிந்தைய நியாயாதிபதிகள் என இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

● **முந்திய நியாயாதிபதிகள்** ***(former judges):*** ஒத்னியேல், ஏகூத், தெபோராள், கிதியோன் ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்கள். சம்கார், தோலா, யாவீர் ஆகிய மூவரைப் பற்றிய விபரங்கள் மிகச் சுருக்கமாகவே தரப்பட்டுள்ளன.

**ஒத்னியேல்,** முதல் நியாயாதிபதி. கூசான் ரிஷதாயீம் என்ற மெசொபொத்தாமியாவின் ராஜாவின் கையில் எட்டு வருடம் அடிமைகளாயிருந்த இஸ்ரவேலரை இவன் விடுவித்தான். காலேபின் மகளான அக்சாள் இவனுடைய மனைவி. இஸ்ரவேலில் நாற்பது வருடங்கள் தலைவனாயிருந்து நியாயம் விசாரித்தான்.

ஏகூத், இரண்டாவது நியாயாதிபதி. இவன் இடதுகை பழக்கமுள்ள பராக்கிரமசாலி. பதினெட்டு வருடங்கள் எக்லோன் என்ற மோவாபின் ராஜாவின்கீழ் அடிமைகளாயிருந்த இஸ்ரவேலரை ஏகூத் விடுவித்தான். இவன் காலத்தில் தேசம் எண்பது வருடங்கள் அமைதலாயிருந்தது.

தெபோராளும், பாராக்கும் ஓரணியில் இணைந்து செயல்பட்டனர். யாபீன் என்ற கானனியருடைய ராஜாவின் இருபது வருட அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலை மீட்டனர். பலத்த பராக்கிரமசாலியாயிருந்த யாபீன் ராஜாவின் தளபதியாகிய சிசெராவை மேற்கொண்டனர். தெபோராள் ஒருத்தியே கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட பெண் நியாயாதிபதி ஆவாள். தீர்க்கதரிசியானவளாகவும் செயல்பட்டாள்.

சம்கார் அறுநூறு பெலிஸ்தரை ஒரு தாற்றுக்கோலால் முறியடித்த இரட்சகன் (3:31).

தோலா இஸ்ரவேலரை இருபத்து மூன்று வருடங்கள் நியாயம் விசாரித்தான், (10:2).

யாவீர் இருபத்திரண்டு வருடங்கள் இஸ்ரவேலில் நியாயாதிபதியாயிருந்தான். இவனது முப்பது குமாரர்கள் 'யாவீர்' என்று பெயரிடப்பட்ட முப்பது கிராமங்களுக்குத் தலைவராயிருந்தனர் (10:3).

இவர்கள் மூவரும் முந்திய நியாயாதிபதிகளின் வரிசையில் பிரபலமானவர்களாயிராவிட்டாலும், கர்த்தரால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியைச் செய்து முடித்தனர்.

**கிதியோன்:**

முந்திய நியாயாதிபதிகளில் குறிப்பிடத்தக்கவன் கிதியோன். மீதியானியாரின் கையிலிருந்து இஸ்ரவேலரை மீட்பதற்குக் கர்த்தர் கிதியோனைப் பயன்படுத்தினார். முந்நூறு மனிதரைக்கொண்டு யுத்தம் செய்து, கர்த்தரே யுத்தத்தை நடத்துகிறவர் என்பதை நிரூபித்தான். இஸ்ரவேலர் இவனைத் தங்களுக்கு ராஜாவாக ஏற்படுத்த முயற்சித்தனர். அவனோ, நான் உங்களை ஆளமாட்டேன் கர்த்தரே உங்களை ஆளுவாராக என்றான், (8:23). இவன் காலத்தில் நாற்பது வருடம் தேசம் அமைதலாயிருந்தது.

● **பிந்திய நியாயாதிபதிகள்:**

யெப்தா, சிம்சோன் ஆகியோர் பிந்திய நியாயாதிபதிகளில் பிரதான மானவர்கள். இப்சான், ஏலோன், அப்தோன் ஆகிய மூவரும் பிரபலமானவர்களல்ல; எனினும் அவர்களும் இஸ்ரவேலரை மீட்டு இரட்சித்தவர்களே!

யெப்தா அம்மோனியரின் பதினெட்டு வருட அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை இரட்சித்து, ஆறுவருஷம் நியாயாதிபதியாகச் செயல்பட்டான் (12:7). எபிரெய புத்தகத்தில் விசுவாச வீரர் பட்டியலிலும் இடம்பிடித்தான் (எபி.11:32). தனது வெற்றியைக் கர்த்தருக்குச் சமர்பிக்கும் விதமாக, யெப்தா செய்த 'மதியீனமான' பொருத்தனை பற்றிய விபரங்களைத்தர இக்கட்டுரையில் இடம் போதாது. எனினும், கீழ்காணும் குறிப்புகளை மனதிற்கொண்டு, அவள் திருமண வாழ்க்கையைப் புறந்தள்ளி, காலமெல்லாம் கன்னிகையாகவே வாழ்ந்தாள் என்றும் எடுத்துக்கொள்ளலாம்:

● லேவி 18:21; 20:2-5ன்படி மோளேகுக்குக் கொடுத்தல் என்பதே கொலைக்குற்றமாயிருக்கையில், பிள்ளையைக் கர்த்தருக்கென பலியிடுதல் சாத்தியமற்ற செயலே!

● யெகோவா தேவன் நரபலியை அங்கீகரிக்கவில்லை. ஈசாக்கு பலியாய் செலுத்தப்படவில்லை; மாறாக ஆபிரகாமின் கீழ்படிதலே ஆதியாகமம் 22-ல் வலியுறுத்திச் சொல்லப்படுகிறது. உபாகமம் 12:31; 18:10 ஆகிய வசனங்களும் நரபலியை தேவன் தடைசெய்திருந்தார் என்று சொல்லுகின்றன. சவுல் தன் மகன் யோனத்தானைத் தனது பொருத்தனையை நிறைவேற்றும்படி கொன்றுவிட மக்கள் அனுமதிக்கவில்லையே! (1சாமுவேல் 14:24-46).

● சீலோவிலேதான் பலி செலுத்தப்பட வேண்டும்; ஆசாரியன்தான் அதைச் செய்யவேண்டும். அங்கும் நரபலி அனுமதிக்கப்படவில்லையே! (லேவி. 17:1-9).

● யெப்தாவின் மகள் தான் சாகப்போவதைக் குறித்துத் துக்கங்கொண்டாடமல், தனது கன்னிமையினிமித்தம் துக்கம் கொண்டாடியதாகப் பார்க்கிறோம், (11:38,39).

எனவே, வாழ்நாளெல்லாம் கன்னிகையாகவே வாழ யெப்தா தன் மகளைப் பிரதிஷ்டை செய்தான் எனலாம்: இரண்டு மாதம் முடிந்தபின்பு தன் தகப்பனிடத்திற்குத் திரும்பி வந்தாள். அப்பொழுது அவன் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான்; அவள் புருஷனை அறியாதிருந்தாள் (11:39).

பிந்திய நியாயாதிபதிகளில் அடுத்து பிரபலமானவன் பக்தியுள்ள பெற்றோருக்கு பிறந்த சிம்சோன். வாழ்நாள் முழுவதும் நசரேய பொருத்தனைக்குட்பட்டவன். "சூரியனைப் போன்றவன்" என்பது இவன் பெயருக்கு அர்த்தம். ஆனால் அவனது தனிப்பட்ட வாழ்க்கையில் அதற்கு உகந்தவனாய் வாழவில்லை. அடிமைப்பட்டிருந்த இஸ்ரவேலரை இரட்சித்து இருபது ஆண்டுகள் நியாயாதிபதியாயிருந்தான். ஒரே மனிதனாய் நின்று, இஸ்ரவேலருக்கும் மிகப்பெரிய விடுதலையை வாங்கித்தந்தவன் இவன்.

இப்சான் ஏழுவருடமும், ஏலோன் பத்து வருடமும், அப்தோன் எட்டு வருடமும் இஸ்ரவேலின் நியாயாதிபதியாயிருந்தனர்.

மொத்தமுள்ள பன்னிரண்டு நியாயாதிபதிகளின் காலத்திலும் நியாயாதிபதிகளுக்கு கர்த்தருடைய மாபெரும் துணை இருந்தாலும், (12:8-15) இஸ்ரவேல் தேசத்தில் தலைமைத்துவம் சரிவுநிலை நோக்கியே சென்றதை நாம் காணமுடிகிறது.

**3.இஸ்ரவேல் தேசம்** (17-21 அதிகாரங்கள்)

இப்புத்தகத்தின் கடைசி ஐந்து அதிகாரங்களில் இஸ்ரவேல் தேசத்தில் நிலவிய பெருங்குழப்பமான சூழலைப் பார்க்கிறோம். ஆன்மீக வீழ்ச்சி, ஒழுக்கச் சீர்கேடு மற்றும் சமூக குழப்பங்கள் விவரித்துச் சொல்லப்பட்டுள்ளன.

ராஜா இல்லாத அக்காலத்தில் விக்கிரக ஆராதனையின் பெருக்கமும் (17:1-18:31), ஒழுக்கக்கேட்டின் உச்சமும் (19:1-30) ஒரு கோத்திரத்துக்கும் இன்னொரு கோத்திரத்துக்குமிடையே ஏற்பட்ட சண்டைகளையும், யுத்தங்களையும் பார்க்கிறோம். கற்பழிப்பும் கொலையும், பிரிவினைகளும் பெருகிப்போயிருந்தன. அவர்களுடைய பாவங்களினிமித்தம் கர்த்தருடைய கரமும் அவர்களுக்கு விரோதமாகவே இருந்தது.

**வேதாகமத்தில் நியாயாதிபதிகளின் பங்கு:**

நியாயாதிபதிகளின் காலம் இஸ்ரவேலரின் சரித்திரத்தில் இருண்ட காலமாகவே வேதாகமம் சித்தரிக்கிறது. தங்கள் கீழ்படியாமையிலேயே இஸ்ரவேலர் தொடர்ந்து துணிந்து நின்றாலும், அவர்கள்மேல் கிருபைவைத்து விடுவித்து, அவர்களைத் தமக்கு உண்மையுள்ளவர்களாய் கொண்டுவர தேவன் மிகவும் பொறுமையாயிருந்தார்.

இஸ்ரவேலில் ராஜா இல்லாத அந்நாட்களில் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான் (21:25). இந்தச் சூழ்நிலையில் இஸ்ரவேலருக்கு கட்டாயமாய் ஒரு மேசியா, (தெய்வீக அரசன் ) தேவை என்பதை நாம் பார்க்கிறோம்.

நியாயாதிபதிகளின் புத்தகமும், ரூத் புத்தகமும் இஸ்ரவேலரின் பரிதாபமான தேச சூழ்நிலையைக் காட்டுகின்றன. இதன்பின்பே தேவன் அவர்களுக்கு ஒரு ராஜாவைக் கொடுத்தார். அதிலும், தாவீது என்ற இலட்சிய அரசனும், அவன் வழியில் வரப்போகும் மேசியாவாகிய கிறிஸ்துவையும் மனதிற்கொண்டே தேவனுடைய செயல்பாடுகள் இருந்தன என்பதையும் பார்க்கிறோம்.

எபிரெய நிருபத்தில் பல நியாயாதிபதிகள் விசுவாச வீரர்களாக இடம்பெறுகின்றனர் (எபி.11). விசுவாசமில்லாத பெருங்கூட்டத்தின் மத்தியிலும் தேவனை நம்பி, தேவனிடமிருந்து வல்லமையைப் பெற்று செயல்பட்ட நியாயாதிபதிகளின் வாழ்க்கையும் செயலும் வாசித்து, தியானித்து பயனடையத்தக்கவையே; நம் வாழ்க்கையில் இதனைச் செயல்படுத்த தேவாதி தேவன் கிருபை தருவாராக!

---


## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது

**Tamil District Council of SIAG** என்று எடுத்து

பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.

பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 2301165.**

## சேமிக்கலாமா?




கிறிஸ்தவர்கள் எதிர்காலத்திற்காக சேமிக்கலாமா? என்ற கேள்வியைக் கேட்டால் சேமிக்கலாம் என்று சொல்கிறவர்களும் உண்டு. சேமிக்கக்கூடாது என்று சொல்கிறவர்களும் உண்டு. சேமிக்கக்கூடாது என்கிறவர்கள் பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம் (மத்தேயு 6:19). நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படக்கூடாது (மத்தேயு 6:31-34) அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்குத் தாரும் (மத்தேயு 6:11) என்று இயேசு சொன்னதை ஆதாரமாகச் சொல்லி வாதிடுவார்கள். சேமிக்கலாம் என்கிறவர்கள் எகிப்தில் பஞ்சம் வருகிறது என்பதை யோசேப்பு மூலம் அறிந்த பார்வோன் யோசேப்பின் மூலம் பஞ்ச காலத்திற்குத் தேவையான தானியங்களைச் சேர்த்து வைத்ததையும் (ஆதியாகமம் 41:48,49), இயேசு 5 அப்பங்களையும் மற்றும் 2 மீன்களை வைத்து ஐயாயிரம் பேரை போஷித்து 12 கூடை நிறைய எடுத்து வைத்ததையும் (யோவான் 6:13), சேமிக்கிறவர்களை நீதிமொழிகள் புத்தகத்தில் ஞானவான் என்று சொல்லப்பட்டிருப்பதையும் (நீதிமொழிகள் 21:20) கூறி வாதிடுவார்கள்.

வேதத்தை நாம் கிரமமாகப் படித்தால் சேமிப்பது பாவம் என்று எங்கேயும் சொல்லவில்லை. மாறாக பல இடங்களில் அது சேமிப்பதை ஊக்குவிக்கிறது. அதே நேரம் சேமிப்பதில் நமக்கு உள்ள அணுகுமுறை, குணாதிசயங்கள், ஏன்? எதற்கு? சேமிக்கிறோம் என பல காரியங்களைக் குறித்து நாம் சிந்தித்து விட்டு சேமிக்க வேண்டும். சேமிக்கும்பொழுது நம்முடைய நம்பிக்கை கிறிஸ்துவை விட்டு விட்டு பணத்தின்மேல் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சேமிக்கும்போது பொருளாசை கூடவே கூடாது. கஞ்சனத்தனமாக இருந்து பணத்தைச் சேமிக்கக்கூடாது. முறைகேடான வழியில் பணத்தை சம்பாதித்து சேமிக்கக் கூடாது. ஏழைகளுக்கும் தேவையானவர்களுக்கும் முடிந்தவரை கொடுத்து சேமிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுக்குக் கொடுக்காமல் சேர்த்து வைக்கக்கூடாது.

### சேமிக்க சில வழிமுறைகள்

1. நமக்கு எவ்வளவு வருமானம் வருகிறதோ அதை முறையாக செலவு செய்ய நல்ல செயல்திட்டம் தேவை. அதற்கு Budget போட்டு செலவு செய்தல் வேண்டும்.
2. நமது இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவைகள் நமது வருமானத்திற்கு ஏற்றவாறு திட்டுமிட்டு அமைக்கப்பட வேண்டும்.
3. செலவு செய்யும்போது அத்தியாவசிய தேவை எது, அநாவசிய தேவை எது என்பதை உணர்ந்து சிக்கனமாக செலவு செய்ய வேண்டும். சிக்கனம் என்கிற பெயரில் கஞ்சத்தனம் கூடாது.
4. நமது அத்தியாவசிய தேவைகள், கர்த்தருக்கான காணிக்கைகள் இவைகள் எல்லாம் போக நம் வருமானத்தில் குறைந்தது 20% நாம் சேமிக்க வேண்டும்.

5. ஆடம்பர செலவுகள் செய்யும்போது அல்லது தகுதி மீறிய செலவுகள் செய்யும்போது தேவையில்லாத கடன்கள் ஏற்படுகிறது. இதன் மூலம் நாம் நமது சேமிப்பை இழக்கிறோம். எனவே தேவ ஞானத்தோடு தீர்மானம் எடுத்து செலவு செய்ய வேண்டும்.

6. சேமித்த பணத்தை வங்கிகள் அல்லது அரசாங்க நிறுவனங்கள் நடத்தும் சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து சேமிப்பை பயனுள்ளதாக மாற்றலாம். அளவுக்கு மீறி ஆசைப்பட்டு, அதிக வட்டி கிடைக்கும் என்று சொல்லி தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதைத் தவிர்க்க வேண்டும். சேமிப்பு நம் குணநலனை ஒழுங்கு செய்கிறது. நம் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் தேவையான நேரத்தில் பயன்படுகிறது. மேற்கண்ட காரியங்களை மனதிற்கொண்டு செயல்படுவோம். ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வோம்.

Er.ஜெயராஜ் மாணிக்கம்

---

## ஜெபம்பண்ணுங்கள்

| | |
|---|---|
| **அ**திகாலையில் ஜெபம்பண்ணுங்கள் | மாற்கு 1:35 |
| **அ**ந்தரங்கத்தில் ஜெபம்பண்ணுங்கள் | மத்தேயு 6:6 |
| **இ**டைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் | அப். 6:4; எபே. 1:16; கொலோ. 4:2; 1தெச. 1:4; 5:17 |
| **இ**ரவும் பகலும் ஜெபம்பண்ணுங்கள் | லூக்கா 2:37;6:12 |
| **உ**பவாசித்து ஜெபம்பண்ணுங்கள் | அப்போஸ்தலர் 13:3 |
| **உ**றுதியாய் ஜெபம்பண்ணுங்கள் | அப்போஸ்தலர் 2:42; ரோமர் 12:12. |
| ஊக்கமாய் ஜெபம்பண்ணுங்கள் | லூக்கா 22:44; அப். 12:5; யாக். 5:16 |
| **எ**ப்பொழுதும் ஜெபம்பண்ணுங்கள் | அப்போஸ்தலர் 10:2 |
| **எ**ல்லா இடங்களிலும் ஜெபம்பண்ணுங்கள் | 1 தீமோத்தேயு 2:8 |
| **எ**ல்லாருக்காகவும் ஜெபம்பண்ணுங்கள் | 1 தீமோத்தேயு 2:1 |
| **ஒ**ருமனமாய் ஜெபம்பண்ணுங்கள் | அப்போஸ்தலர் 1:14 |
| **க**ண்ணீரோடு ஜெபம்பண்ணுங்கள் | எபிரெயர் 5:7 |
| **க**ருத்தாய் ஜெபம்பண்ணுங்கள் | யாக்கோபு 5:17 |
| **செ**ம்மையாய் ஜெபம்பண்ணுங்கள் | நீதிமொழிகள் 15:8 |
| **சோ**ர்ந்துபோகாமல் ஜெபம்பண்ணுங்கள் | லூக்கா 18:1 |
| **த**னிமையாய் ஜெபம்பண்ணுங்கள் | 2 நாளாகமம் 7:14 |
| **வி**சுவாசமாய் ஜெபம்பண்ணுங்கள் | மத்தேயு 21:22 |
| **வி**ழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் | மத்தேயு 26:41; 13:13; 2 தீமோ. 1:3 |
| **ஸ்**தோத்திரத்தோடு ஜெபம்பண்ணுங்கள் | பிலிப்பியர் 4:6 |
| **ஜா**க்கிரதையாய் ஜெபம்பண்ணுங்கள் | 1 பேதுரு 4:7 |

Rev. மு. அருள்தாஸ்

---



# உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன்


## திருமதி. ராணி ஜெயச்சந்திரன்

மூத்த போதகர், கிரேஸ் ஏ.ஜி. சர்ச், தஞ்சாவூர்
Women's Ministry, Tamil District Council of SIAG


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்...

உபா.26:19-ல் ஆண்டவர் தம்முடைய ஜனங்களுக்கு நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் **"உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன்"** என்று வாக்குத்தத்தம் கொடுக்கிறார். ஏனென்றால் நம்முடைய தேவன் சிறந்தவர். (கொலோசெயர் 2:13-15) ஜெயக்கிறிஸ்து சிலுவையின் மேல் வெற்றிச் சிறந்தவர். எனவே நம்மையும் எல்லா இடங்களிலும் வெற்றி சிறக்க செய்கிறார். சிறப்பான சுதந்தரத்தை தருகிறார்.

இந்த வாக்குத்தத்தம் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் கொடுக்கிறார். உபா.26-ம் அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குப்பண்ணின தேசத்தை கொடுத்த பின்பு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறார்.

### யாரைச் சிறந்திருக்கும்படி செய்வார்

உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுத்த தேசத்தில் நீ பயிரிடும்போது நிலத்தின் கனிகளிலெல்லாம் முந்தின பலனை எடுத்து, கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துக்கொண்ட ஸ்தானத்தில் கொண்டு வந்து, ஆசாரியனிடத்தில் கொடுத்து நீ சொல்ல வேண்டியது என்னவென்றால் என் தகப்பன் அழிவுக்கு நேரான சீரிய தேசத்தான். அவன் கொஞ்ச ஜனங்களோடே எகிப்துக்குப்போய் அவ்விடத்திடத்தில் பரதேசியாய் சஞ்சரித்து அங்கே பெரிய பலத்த திரட்சியான ஜாதியானான் அங்கே எகிப்தியர் எங்களை ஒடுக்கி, சிறுமைப்படுத்தி கனமான வேலையைச் சுமத்தினபோது, எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டோம். கர்த்தர் எங்கள் சத்தத்தை கேட்டு, எங்கள் சிறுமையையும், வருத்தத்தையையும், ஒடுக்கத்தையும் பார்த்து பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரங்களினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட பாலும் தேனும், ஓடுகிற தேசமாகிய இந்த தேசத்தை எங்களுக்கு கொடுத்தார். இதோ கர்த்தாவே தேவரீர் எனக்கு கொடுத்த நிலத்தினுடைய கனிகளின் முதற்பலனைக் கொண்டு வந்தேன் என்று சொல்லி, உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் பணிந்து, நீயும் லேவியனும், உன்னிடத்திலுள்ள பரதேசியும் கர்த்தர் அநுக்கிரகம் பண்ணின சகல நன்மைகளினிமித்தமும் சந்தோஷப்படுவீர்களாக. அதைப்போல தசமபாகம் செலுத்தும் வருஷத்திலே நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும் பரதேசியும் திக்கற்ற பிள்ளையும் விதவையும் உன் வாசல்களில் புசித்து திருப்தியாகும்படி அவர்களுக்கு கொடு. பின்பு அவரைப் பார்த்து உம்முடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, உம்முடைய கட்டளைகளில் ஒன்றையும் மீறவும் இல்லை மறக்கவும் இல்லை எனக்கு கட்டளையிட்டபடி சகலமும் செய்தேன். நீர் உமது பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருந்து எங்களை இந்த தேசத்தில் ஆசீர்வதியும் என்று சொல்வாயாக... என்று சொல்கிறார். தங்கள் முழு இருதயத்தோடும் ஆத்துமாவோடும் அவருடைய கட்டளையை காத்து நடக்கிற தம்முடைய ஜனங்களுக்கு தான் கர்த்தர் இந்த வாக்குக்கொடுக்கிறார். சிறந்தவரின்

சிறப்பானவைகள் அவர் எப்படி நம்மை சிறந்தவளாக மாற்றுகிறார் என்கிற மூன்று காரியத்தை தியானிக்கப் போகிறோம்...

**1.சிறந்த வஸ்திரம்** (சகரியா 3:4)

யூதஜனங்கள் பாபிலோன் தேசத்தின் 70 ஆண்டுகள் சிறையிருப்பு முடிந்து கொஞ்சம் கொஞ்சமாக எருசலேமுக்கு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். அதில் வந்தவர்கள் தான் செருபாபேல் மற்றும் பிரதான ஆசாரியனாகிய யோசுவா இவர்களை கொண்டு தான் மறுபடியும் எருசலேமில் ஆலயத்தை கட்ட வேண்டும் என்று தேவனுக்கு ஒரு திட்டம் இருந்தது. இந்த யோசுவாவை குறித்து சகரியா தீர்க்கதரிசிக்கு ஒரு தரிசனம். அதில் கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக பிரதான ஆசாரியனாகிய யோசுவா நின்றுக்கொண்டிருக்கிறார். யோசுவாவுக்கு விரோதஞ் செய்ய பிசாசு அவன் வலது பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறான். பிசாசு இன்றும் நமக்கு எதிராக ஓயாமல் தேவ சமுகத்தில் குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கிறான். அவன் நோக்கத்தை அறிந்து கர்த்தர் சாத்தானை கடிந்துகொண்டார். யோசுவாவை குறித்து கர்த்தர் சொல்கிறார், “இவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா” என்று கர்த்தர் சொல்லுகிறார். யோசுவா அழுக்கு வஸ்திரம் தரித்திருப்பது உண்மைதான். ஆனால் இந்த யோசுவாவை கொண்டு தான், இடிக்கப்பட்ட பாழாக்கப்பட்ட ஆலயத்தை எருசலேமில் மீண்டும் கட்ட திட்டமிட்டுள்ளேன். அவன் தான் எப்படி இருக்கிறானோ அப்படியே வந்து நிற்கிறான் புதுவஸ்திரம் தரித்து நீதிமான் போல் என் சமுகத்தில் பொய்யான வேஷம் தரித்து நிற்கவில்லை தான் உள்ளபடியே வந்து நிற்கிறான் என்று சொல்லி தம்மண்டை நிற்கிற தூதர்களை பார்த்து யோசுவாவுக்கு அவன் மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களை களைந்துப் போட சொல்லி, யோசுவாவை பார்த்து, “பார் நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து, உனக்கு சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன்” என்றார், அவன் சிரசின் மேல் சுத்தமான பாகையை வைக்க கட்டளையிட்டார். இன்றும் அவருடைய சமுகத்தில் வந்திருக்கிற அவருடைய பிள்ளைகளாகிய நம்மைப் பார்த்து கர்த்தர் சொல்லுகிறார் பாவத்தில் சிக்கி உண்மையான மனஸ்தாபத்தோடு என் சமுகத்தில் வந்திருக்கிறார்களோ அவர்களுக்கு அழுக்கு வஸ்திரத்தை களைந்து சிறந்த வஸ்திரத்தை தரிப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

**2.சிறந்த குதிரையாக மாற்றுகிறார்** (சகரியா 10:3)

இந்த 10-ஆம் அதிகாரத்தில் சிறையிருப்பிலிருந்து வந்த ஜனங்களை தமது அன்பால் தமது மந்தையாகிய யூதா ஜனங்களை விசாரித்து சந்திக்கிற நேரம். மந்தை என்றால் ஆட்டு மந்தையை குறிக்கிறது. தேவன் தமது ஜனங்களை பார்த்து சொல்கிறார். நீ என் ஆடு நான் உன் மேய்ப்பன் உண்மை தான். உனக்கு ஒரு யுத்தம் இருக்கிறது. இந்த யுத்தத்தில் நீ ஜெயிக்க வேண்டுமானால் உனக்குள் ஒரு மறுரூபம் உண்டாக வேண்டும். ஆடு யுத்தம் பண்ணாது ஆண்டவருடைய கரம் நம்மேல் படும்போது ஆடாகிய நம்மை சிறந்த யுத்த குதிரையாக மாற்றுகிறார். நம்முடைய ஆண்டவர் ஜெயம் கொடுக்கிறவர் ஜெயம் பெற்றார், பிசாசை ஜெயித்தார், உலகத்தை ஜெயித்தார், மரணத்தை ஜெயித்தார், பாதாளத்தை ஜெயித்தார், பிசாசின் தலையை நசுக்கினார். அவர் பெயரே “ஜெயகிறிஸ்து” ஜெயக்கிறிஸ்துவாய் நமக்குள்ளே இருக்கிறார். ஜீவ அப்பமாய் வந்த அவரை நாம் புசிக்கும்போது நம்மை சிறந்த குதிரையாய் மாற்றும். குதிரை எதை பார்த்தும் பயப்படாமல் மிடுக்காய் நடந்து செல்லும். நாமும் நம் குடும்பமாய் சூழ்நிலையை பார்த்தோ, கொள்ளை நோயை பார்த்தோ, பிரச்சனைகளை பார்த்தோ பயப்படாமல் ஜெயிக்க பிறந்தவர்கள், ஆளுகை செய்ய பிறந்தவர்கள். எனவே அவர் மாற்றுவதற்கு நம்மை அர்ப்பணிக்கும்போது நம்மை சிறந்த குதிரையாக மாற்றுவார்.

**3.சிறந்த ஸ்தானம்** (லூக்கா 15:11-24)

இளையகுமாரன் தகப்பனிடத்தில் ஆஸ்தியை பிரித்துக்கொண்டு போய் தன் இஷ்டம் போல் செலவழித்து எல்லாவற்றையும் இழந்து பன்றி திண்கிற தவிட்டினால் தன் வயிற்றை நிரப்ப நினைத்தவனுக்கு அதுக்கூட கிடைக்கவில்லை. அப்பொழுது புத்தி தெளிகிறது. என் தகப்பன் வீட்டில் வேலைக்காரர் கூட பூர்த்தியாய் புசித்து இருக்கிறார்கள். எனவே தகப்பனிடத்தில் போய் பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன். உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல. உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி தகப்பனிடத்தில் புறப்பட்டு வந்தான். தகப்பனோ தூரத்தில் வரும்போது கண்டு மனதுருகி ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தஞ்செய்தான். குமாரன் தகப்பனை நோக்கி உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக... என்று சொல்வதற்கு முன்பே தகப்பன் ஊழியக்காரரை நோக்கி உயர்ந்த வஸ்திரத்தை கொண்டு வந்து உடுத்த சொல்லி, கைக்கு மோதிரத்தையும், கால்களுக்கு பாதரட்சைகளையும் போட கட்டளையிட்டான். கூலிக்காரனாக அல்ல மகனாக அதே ஸ்தானத்தில் திரும்பும் ஏற்றுக்கொண்டார். இளையகுமாரனைப் போல நீங்களும் ஆண்டவருக்கும் உங்களுக்கும் உள்ள உறவை இழந்து ஆவிக்குரிய அனுபவங்களை இழந்து இருக்கிறீர்களா? ஆண்டவர் என்னை ஏற்றுக்கொள்வாரோ என்று கேள்வியோடு தயக்கத்தோடு இருக்கிறீர்களோ...நீங்கள் அவரிடத்தில் திரும்பி வரும்போது நீங்கள் இழந்துபோன அந்த ஸ்தானத்தை ஆவிக்குரிய அனுபவத்தை திரும்பவும் கொடுக்க தேவன் ஆயத்தமுள்ளவராய் இருக்கிறார்.

சிறந்தவர் சிறப்பான வஸ்திரத்தை தருகிறார், சிறந்த குதிரைகளாக நம்மை மாற்றுகிறார், சிறந்த ஸ்தானத்தை கொடுக்கிறார்.

---

## HOW TO PREPARE FOR THE COMING OF JESUS?

இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?
மத்தேயு 24:44; 25:10. வெளி. 19:7

1. **PURIFY** YOURSELF.
   பரிசுத்தராயிருங்கள்
   யூதா 23; 1 யோவான் 3:2,3; 2 பேதுரு 3:14; வெளி. 22:11
2. **PRAY** WITH WATCHFULNESS
   ஜெபம்பண்ண ஜாக்கிரதையாயிருங்கள்
   யூதா 20; 1 பேதுரு 4:7; லூக்கா 21:36
3. **PRACTISE** CHRISTIAN LOVE
   கிறிஸ்துவின் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்
   யூதா 21; மத்தேயு 25:32-45; 24:12; 2 தீமோ.3:3
4. **PROCLAIM** THE GOSPEL
   சுவிசேஷத்தை அறிவியுங்கள்
   யூதா 22; 2 தீமோ.4:1,2; 2 பேதுரு 3:9; மத்.24:14
5. **PERSEVERE** IN FAITH.
   விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்
   லூக்கா 18:8; யூதா 20; 1 பேதுரு 5:9; 1 தீமோ.4:1





## REGULAR FULL TIME COURSES

### முழு நேர பயிற்சி வகுப்புகள்

முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும் சகோதரர்களுக்கு

போதனை மொழி: தமிழ்

- இறையியல் பட்டப்படிப்பு
  (Bachelor of Theology) (ATA)
  தகுதி: 12ம் வகுப்பு காலம்: 3 ஆண்டுகள்
- இறையியல் டிப்ளோமா
  (Diploma in Theology) (ATA)
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்
- இறையியல் சான்றிதழ்
  (Certificate in Theology)
  தகுதி: 10ம் வகுப்புக்கு கீழ் காலம்: 2ஆண்டுகள்

# முறையான வேதாகம கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

## EVENING PART TIME COURSES

### பகுதி நேர பயிற்சி வகுப்புகள்

For Both Men and Women

Classes: Monday, Thursday & Friday | 6:30 – 8:30 Pm

போதனை மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்

- MASTER OF ARTS IN CHRISTIAN MINISTRY (ATA)
  Eligibility: Any Degree | Duration: Two Years
  Medium of Instruction: English
- கிறிஸ்தவ ஊழியம் – முதுகலை (ATA)
  தகுதி: பட்டபடிப்பு காலம்: 2 ஆண்டுகள்

## ADMISSION OPEN

## EVENING PART-TIME ONLINE COURSE

### மாலை பகுதி நேர ஆன்லைன் வகுப்பு

- கிறிஸ்தவ ஊழியம் – டிப்ளோமா
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்

For further information and application form, please contact
Rev. M. Sampath (Principal, MABC)
Mobile : +91 - 94442 87322

# MADRAS ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE

No. 191 (New No. 6), Anna Salai,
Little Mount, Chennai – 600 015, TN.
Phone: 044 – 2235 1646 | 2235 3100
Email: mabc_edu@yahoo.com



# இன்றைய அவசரத் தேவை

**Rev. J. தேவதாசன் கலையரசன்**
Senior Pastor, Bethel AG Church, Kolathur

பொருளாதார நெருக்கடியில் இருப்போர் எதற்காக அதிகம் ஜெபிக்கிறார்கள்? பெரும்பாலான நேரங்களில் இவ்வளவு பணம் தேவை, தாரும் ஆண்டவரே என்று ஜெபிக்கிறார்கள், தங்களுக்காக பிறரையும் ஜெபிக்க வைக்கிறார்கள். உங்களது ஆலயத்தை விஸ்தாரப்படுத்தி, முழுமையாக கட்டிமுடிக்க வேண்டியிருக்கலாம். சபைக்கான புதிய இடம் தேடுவதாயிருக்கலாம். உங்களது பிரதான ஜெபக்குறிப்பாக எது இருக்கும்? தேவனே இந்தளவு பணம் தாரும் என்பது பிரதான ஜெபக் குறிப்பாகமாறும், அப்படித்தானே?

சிலகுடும்பங்கள் திருமணத்தடையால் கலங்கிக் கொண்டிருக்கலாம். அவர்களின் பிரதான ஜெபகுறிப்பு என்னவாக இருக்கும்? இந்த வருடத்திலாகிலும் என் மகளுக்கு ஏற்ற வரன் தாரும் ஆண்டவரே என்பதாகத் தானே இருக்கும்!

இன்னும் சிலர் இக்குறிப்பிட்ட காரியத்திற்காக இத்தனை வருடங்கள் ஜெபித்து வருகிறேன், என்னதான் கர்த்தர் செய்ய இருக்கிறாரோ தெரியவில்லை! என்ற ஏக்கப் பெருமூச்சுடன் காத்திருக்கிறார்கள். வேறுபலர் ஜெபித்துவிட்டேன், பதில் எப்படி இருந்தாலும் பரவாயில்லை என்று மனதை தேற்றிக் கொண்டுவிடுகிறார்கள்!

ஏன் தேவபிள்ளைகள் இதுபோன்ற சூழலில் கையறு நிலையில் இருக்கிறார்கள்? நீங்கள் சிலசமயம் இதுபோன்ற நேரங்களில் கைவிடப்பட்ட நிலையை உணர்கிறீர்களா? உங்கள் பக்தியிலோ, ஜெபத்திலோ குறைவில்லாதிருக்கும்போது, இதுபோன்ற காத்திருப்பின் காலங்களில் ஏமாற்ற உணர்வோடு இருப்பது ஏன்?

சில மாதங்களுக்கு முன் ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்ட எங்கள் ஆலயத்தை விரிவுப்படுத்தி கட்டிமுடிக்க விரும்பினோம், அதற்கு பணம் தேவைப்பட்டது. எனது ஜெபங்களில் எப்போதும் பிரதான குறிப்பு 2 கோடி ரூபாய் தாரும் என்றாகிவிட்டது. எனது நம்பிக்கை, ஜெபித்து முடித்தவுடன் என்கையில் 2 கோடி கிடைத்துவிடும் என்பதே. சர்வ வல்லவரும், சர்வஞானியுமான தேவனுக்கு, ஆகச்சிறந்த ஆலோசனை கொடுக்கக்கூடிய அளவில் என் ஜெபம் மாறிற்று. இது லேசான காரியம் தான் தேவனே. 200 குடும்பங்கள் தலா ஒரு லட்சம் கொடுக்கச் செய்தருளும், 52 நாட்களில் நானும் பிரதிஷ்டை செய்துவிடுவேன்,என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தேன்.

மதிகேடனே உனக்குத் தேவை 2 கோடி பணம் அல்ல. இந்தப் பெரிய பணியை செய்து முடித்திடும் விசுவாசம் தான் உனக்கு அவரச தேவை என்றார் கர்த்தர்.

நீங்கள் எதிர்பார்க்கும் காரியங்களுக்காக, ஜெபித்து முடித்தவுடன் கையில் உடனேயே அது கிடைக்கவேண்டும் என்ற அவசரத்தை அழுத்தமாக்க இடம் கொடாதிருங்கள். மாறாக இச்சூழ்நிலையை, வென்றெடுக்கத் தேவையான விசுவாசம் உங்களுக்குள் இருக்க வேண்டும் என்பதை நாடுங்கள். அதுவே இன்றைய அவசரத் தேவை.

## 1.வேதாகம அடிப்படை

1.அவரிடத்தில் சேருகிறவன், தேவன் உண்டு என்று நம்புவது மாத்திரம் அல்ல, அவரைத் தேடுபவர்களுக்குப் பலன் கொடுப்பவர் என்றும் விசுவாசிக்க வேண்டும் (எபி.11:6). இதுவே உங்களிடம் தேவன் எதிர்ப்பார்ப்பது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.

2.தேவனுக்கேற்ற கிரியை செய்ய நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று ஒரு கூட்ட மக்கள் கேள்வி கேட்டார்கள். அதற்கு பதிலாக இயேசு கிறிஸ்து ஒரு பெரிய List கொடுப்பார் என காத்துக் கொண்டிருந்திருப்பார்கள். "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே. தேவனுக்கேற்ற கிரியை" என்று ஒற்றை வாக்கியத்தில் பதில் சொல்லிவிட்டார் (யோவான் 6:28,29).

3.மனந்திரும்புதலில் ஆரம்பித்து (எபே.2:8), அன்றாட தேவை சந்திக்கப்படுவதிலிருந்து (எபி.11:6), பரமகானான் சேரும் வரை (2தீமோ.4:8, யூதா 24) நாம் தடுமாறாதிருக்க, விழாதிருக்க, தடைகளை உடைத்து முன்னேறிக் கொண்டேயிருக்க விசுவாசம் தான் அடிப்படைத் தேவை. உங்களுக்குள் விசுவாசம் இருக்கிறதா என்று சோதித்தறியுங்கள் (1கொரி.13:5).

## 2.மாற்றப்படவேண்டிய ஜெபக்குறிப்புகள்

1.அதைத்தாரும், இதைத்தாரும் என்று கடவுளையே ATM மெஷினாக கருதி கர்த்தரை அணுகும் முறையை, மற்றும் அப்படிப்பட்ட ஜெபக்குறிப்புகளை மாற்றிகொள்ளுங்கள்.

2.அதே சமயம் தேவைக்காக ஜெபிக்கக்கூடாது என்பதல்ல. நீங்கள் ஒன்றும் முயற்சி செய்திராமல், கண்ணைமூடி ஜெபித்து, கண்ணைத் திறந்தவுடன், பதிலைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்கிற தவறான மனநிலையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்பதே காரியம் (யாத்.14:15).

3.என் தேவையைச் சந்திப்பவர் என்று விசுவாசிப்பதற்கான விசுவாசத்தையும், நீரே எனக்குத் தாரும் என்று ஜெபிக்கலாமா? சிலர் அப்படித்தான் பல வருடங்களாக பரிதாபமாக ஜெபித்துக் கொண்டு இருக்கிறார்கள். விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி வேதவசனங்களால் தான் வரும் என்று வேதம் சொல்லியிருக்க (ரோமர் 10:13-15) நீரே அந்த விசுவாசத்தையும் தாரும் என்று ஜெபிப்பது தகுமோ?

4.விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் தேவ வசனங்களை தேடி வாசிப்பது, விசுவாசத்தைத் தூண்டும் தேவசெய்திகளைக் கேட்பது இருளுக்குள் இருக்கும் தேவஜனங்களுக்கு ஒளிக்கீற்றாக இருக்கும் (ஏசா.50:10). பரிசுத்த ஆவியினால் நம்பிக்கை பெருகவும் இடம் கொடுங்கள் (ரோமர் 15:13).

## 3.உங்கள் இருதய விசுவாசத்தை வெளிப்படுத்தும் வழிகள்

1.இரட்சிப்பிற்குள் மட்டுமல்ல, நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டிய எந்த ஒரு பதிலுக்கும், ஆசீர்வாதத்திற்கும் அடிப்படை விசுவாசமே. ஆனால் மனதிற்குள், விசுவாசிக்கிறேன் என்று சொல்லியும் பகிரங்கமாக அறிக்கையிடாமல், பல வருடங்கள் காத்திருந்தாலும், நாம் இரட்சிக்கப்பட முடியாது. வேறு எந்த ஒரு ஆசீர்வாதத்தையும் பெற இயலாது. இருதயத்திற்குள் மறைந்துகிடக்கும் விசுவாசத்தை, வெளி உலகத்தில் அறிக்கை செய்வதே விசுவாசத்தை செயல்படுத்த உதவும் திறவுகோல் (ரோமர் 10:9,10).

2.இயேசு படகில் இருக்கும்போதே புயலா? புயலைப் பொருட்படுத்தாமல் இயேசுவின் அமைதி, நித்திரை ஏன்? அற்ப விசுவாசிகளே என்று கண்டனம் ஏன்? என்று நமக்குள் கேள்வி எழும்புகிறது. ஆனால் "சீஷர்களே அந்தப் பிரச்சனையை டீல் செய்யவேண்டுமெனவும்; அதை விசுவாசத்துடன் எதிர்கொள்ளவேண்டு மெனவும் இயேசுகிறிஸ்து எதிர்பார்த்திருக்கிறார்" என்பதை அவரது சீற்றம் உணர்த்துகிறது (மத்.8:23,27).

## இறுதியாக

இன்று நீங்கள் கடந்துபோகும் சூழ்நிலை, முன் எப்போதும் கடந்திராத ஒன்றாக இருக்கலாம். தாண்டமுடியாத எல்லையாக கூட இருக்கலாம். ஆனால் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தும் ஒரு சிறிய செயலை இன்று நீங்கள் செய்துவிடுங்கள். அதுவே உங்கள் விசுவாசம் செயலில் வெளிப்படக் காரணமாகிவிடும். அப்போது தான் தேவமகிமையைக் காண்பீர்கள் (யோவான் 11:40).

விசுவாசம், கிருபை போன்ற பதங்கள் துர்உபதேசக்காரர்கள் அதிகம் பயன்படுத்தும் பதங்களாக மாறி இருப்பதால், அவர்கள்மேல் உள்ள கோபத்தில், விசுவாசத்தின், கிருபையின் அவசியத்தை அல்லத்தட்டிவிடாதீர்கள், அவரை அறிகிற அறிவில் வளரும்போது இயேசு கிறிஸ்துமேல் உள்ள அன்பிலும் விசுவாசத்திலும் வளர்வீர்கள். விசுவாச வீரராக, வீராங்கனைகளாக வாழ்ந்து தேவனுக்காக பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள்.

## பற்களை பாதுகாப்பது எப்படி?



- தினசரி காலை எழுந்தவுடன், இரவு உணவுக்குப்பின் பல் துலக்க வேண்டும்.
- எப்போது சாப்பிட்டாலும், வெந்நீர் அல்லது கல்லுப்பு கலந்த வெந்நீரால் வாயைக் கொப்பளிக்க வேண்டும்.
- பற்களைத் துலக்கும்முன் பிரஷை, குழாயைத் திறந்துவிட்டு நேரடியாகத் தண்ணீரில் கழுவ வேண்டும். கப்பில் பிடித்துவைத்த நீரில் கழுவக்கூடாது.
- நீண்ட நேரம் பற்களைத் தேய்க்கக்கூடாது அழுத்தியும் தேய்க்கக்கூடாது.
- இனிப்புகள், குளிர்ந்த மற்றும் சூடான உணவுகளை அதிகமாக உட்கொள்ளக் கூடாது.
- தூங்கி எழுந்ததும் பல் துலக்காமல் காபி, பால் போன்றவற்றைப் பருகக்கூடாது. இவை, பற்களில் உள்ள உணவுத் துணுக்குகளை வயிற்றுக்குள் கொண்டு சென்றுவிடும். அதனால் பல வயிற்று உபாதைகள் ஏற்படும்.
- கடினமாக பொருள்களை கடிக்கக்கூடாது. பற்களை, குளிர்பானங்களைத் திறக்கும் ஒப்பனர்களாகப் பயன்படுத்தக்கூடாது.
- புகைப்பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.



# அரணுக்குத் திரும்புவோம்

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

**நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்** (சகரியா 9:12).

இஸ்ரவேல் ஜனங்கள் 70 வருடம் பாபிலோனிலே சிறைப்பட்டிருந்தார்கள். அப்படி சிறைப்பட்டிருந்தவர்களில் அநேகருக்கு நாம் விடுதலையாகி எருசலேமுக்கு வருவோம் என்ற நம்பிக்கை இல்லாதிருந்தது. ஆனால் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக அவர்களுக்கு ஒரு நம்பிக்கையை கொடுத்தார். அந்த நம்பிக்கை இருந்தவர்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து வெளியே வந்தார்கள். தேவன் அவர்களுக்கு இரட்டிப்பான நன்மைகளைக் கொடுத்தார்.

## சபையே அரண், சபையே பாதுகாப்பு

பாபிலோன் என்பது குழப்பம், எருசலேம் என்பது சபையைக் காட்டுகிறது. அது பாதுகாப்பான அரணாக இருக்கிறது. ஏனெனில் சபையே இயேசுவின் சரீரமாக இருக்கிறது. சபையே இயேசுவின் மணவாட்டியாக இருக்கிறது. இயேசு அதற்கு அஸ்திபாரமாக இருக்கிறார். அதை தம்முடைய வார்த்தைகளினால் போஷிக்கிறார். குழப்பம் நிறைந்த இடத்திலிருந்து தேவன் ஜனங்களை அரணான தம்முடைய சபைக்கு கொண்டு வருகிறார். சபைக்குள்ளே வந்த பிறகு உங்களுடைய குழப்பம் மாறி நல்ல தெளிவு உண்டாகிறது. ஒரு நம்பிக்கையும் ஆசீர்வாதமும் உண்டாகிறது.

## சபையில் நிலைத்திருப்பவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம்

சபையில் நிலைத்திருந்து தேவனுக்கு கீழ்படிகிற தேவ பிள்ளைகளே கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, தேவன் இந்த புதிய வருடத்திலே உங்களுக்கு இரட்டிப்பான நன்மைகளைத் தருகிறார். கடந்த வருடத்திலே எத்தனையோ பாடுகள் உபத்திரவங்கள் இழப்புகள் வந்திருக்கலாம். ஆனால் இந்த வருடத்திலே தேவன் அதையெல்லாம் மாற்றப்போகிறார். நமக்கு சமாதானத்தைக் கட்டளையிடுவார். நன்மைகளைக் கட்டளையிடுவார். இரட்டிப்பான நன்மைகளைத் தருவார். அதை இன்றைக்கே தருவார். உடனே அதை அனுபவிக்க முடியாவிட்டாலும் தேவன் நமக்கு கொடுக்கிற நிபந்தனைகளுக்கு கீழ்படியும்போது அதை எளிதாக சுதந்தரிக்க முடியும்.

## நன்மையும் தீமையும் உருவாகும் இடம்

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1:17).

நன்மையான எந்த ஈவும் பரத்திலிருந்து வருகிறது. சாத்தான், வியாதி, துன்பம், வறுமை போன்ற தீமைகளைக் கொண்டு வருகிறான். குழப்பங்களைக் கொண்டு வருகிறான். இந்த உலகத்திலே சாத்தான் இப்படிப்பட்ட குழப்பங்களைக் கொண்டு வருகிறான். ஒரு சில விசுவாசிகள் சாத்தானுக்கு தங்களுடைய வாழ்க்கையில் இடம் கொடுக்கிறபடியினால் இப்படிப்பட்ட குழப்பங்கள் அவர்களுடைய வாழ்க்கையிலும் வருகிறது. அப்படிப்பட்ட குழப்பங்களோடு நீங்கள் இருப்பீர்களானால் தேவன் மேல் நம்பிக்கை வைத்து தேவனிடத்திற்கு திரும்பும்போது உங்கள் குழப்பங்கள் மாறி நீங்கள் இரட்டிப்பான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அப்பொழுது உங்கள் ஜெபங்களுக்கு பதில் கிடைக்கும்,

உங்கள் வியாதி கஷ்டங்கள் நீங்கி நன்மையான ஈவுகளை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

### உலகத்திலே குழப்பம்

இந்த உலகத்திலே விக்கிரகாராதனை பெருகி வருகிறது. ஜனங்கள் மெய்யான தேவனை அறியாமல் குழப்பத்திலே இருக்கிறார்கள். நாம் இப்படிப்பட்ட ஜனங்கள் மத்தியில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்க வேண்டும். வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள் இந்த பூமியில் இராதபடி அழிந்து போகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று வேதம் கூறுகிறது. ஆகவே நாம் இப்படி குழப்பத்தில் உள்ள ஜனங்கள் மத்தியில் சாட்சியாக வாழ்ந்து மெய்யான தேவன் யார் என்பதை அவர்களுக்கு முன்பதாக சாட்சியோடு வெளிப்படுத்த வேண்டும். ஆத்துமாக்களை ஆதாயம் செய்து சபையில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

### நீங்கள் செய்ய வேண்டியது

இதை வாசிக்கிற தேவபிள்ளைகளே உங்கள் வாழ்க்கையில் உலக சிநேகம் இருக்குமானால் உங்கள் வாழ்க்கையில் குழப்பங்கள் காணப்படும். ஏனெனில் உலகம் பொல்லாங்கனுக்குள் இருக்கிறது. நீங்கள் சாத்தானால் சிறைப்படுத்தப்படுவீர்கள். நீங்கள் நம்பிக்கையோடு தேவனிடத்தில் வருவீர்களானால் தேவன் உங்கள் வாழ்க்கையில் இரட்டிப்பான நன்மைகளைக் கொடுத்து ஆசீர்வதிப்பார். ஆமென்

---

**உங்களுக்குத் தெரியுமா?**

### *உலகம் முழுவதும்*

- ஒரு நிமிடத்திற்கு 105 பேர் மரிக்கிறார்கள்.
- ஒரு நாளைக்கு 1,51,000 பேர் மரிக்கிறார்கள்.
- ஒரு ஆண்டில் 5 கோடியே 53 லட்சம் பேர் மரிக்கிறார்கள்.
- இதில் 6% மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாய் இருக்கிறார்கள்.
- ஒரு நிமிடத்திற்கு 9 விசுவாசிகளும் 147 அவிசுவாசிகளும் மரிக்கிறார்கள்.

**ஒரு நிமிடத்திற்கு 80 பேர் இயேசு இல்லாமல்**
**நித்திய அழிவுக்குப் போகிறார்கள்**

உங்கள் பங்கு என்ன?
நற்செய்தி அறிவிக்கப் பயிற்சி பெறுங்கள்! ஊழியம் செய்யுங்கள்

*Jesus said, "Go into all the world" (Mk 16:15)*
*The world begins where your frontyard ends*

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

# Antioch Biblical Seminary & College

Affiliated with Tamil District Council of SIAG

Accredited by Asia Theological Association (ATA)

## M.Th. Program : *A Non - Residential* Course in Christian Theology

***Wanted : Residential Faculty with M.Th./Ph.D. (ATA / Serampore) in any discipline. (North Indians Preferred)***

| Courses | Duration | Qualification |
|---|---|---|
| B.Th. | 3 Years | 12th Pass |
| M.Div. | 2/3 Years | B.Th (ATA) / any University Degree |
| Dip. Th. | 2 Years | 10th Pass |






## College Reopens on the 2nd of June 2022

**The Registrar**

**ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE**

Post Box -05, Pondicherry University, Pillaichavady, Mathur Road, Puducherry - 605 014
Office Phone : (0413) 2970521/22/23 | Cell : 098652 09821 | EMail: abscollege@gmail.com
Website : www.antioch.in

## வாழ்க்கை துணையை தேர்ந்தெடுக்கும்போது கவனிக்க வேண்டிய 10 காரியங்கள்

1. அவிசுவாசிகளுடன் ஒருநாளும் பிணைப்படாதீர்கள் (2 கொரி. 6:14).
2. அவசர அவசரமாக வாழ்க்கை துணையை தெரிந்தெடுக்க முனையாதீர்கள்.
3. பணத்திற்காக (வரதட்சணை) உங்கள் வாழ்க்கை துணையை தேர்ந்தெடுக்க அனுமதிக்காதீர்கள் (1 தீமோ. 6:10).
4. பிறரின் வற்புறுத்தலுக்கோ அல்லது கட்டாய கல்யாணத்திற்கோ விருப்பம் தெரிவிக்காதீர்கள்.
5. கர்த்தர் எனக்கு காட்டினார் அவன் / அவள் தான் உன் வாழ்க்கை துணை என்று சொல்லும் தீர்க்கதரிசனத்தில் கவனமாக செயல்படுங்கள். தேவசித்தத்தை நீங்களே தேவப்பாதத்தில் அமர்ந்து அறிந்து கொள்ளுங்கள்.
6. பெண் ஆணைவிட வயதில் சிறியவளாக இருப்பது, குடும்பத்தில் மனைவி கீழ்ப்படியவும், கணவனை சார்ந்திருக்கவும் கணவனை நேசிக்கவும், புரிந்துகொள்ளவும் உதவும்.
7. அழகு ஒன்றேபோதும் என்று வெளிப்படையான அழகு வைத்து மதிப்பெண் போடாதீர்கள். திருமணத்திற்குபின் அவை எல்லாம் எங்கோ காணாமல் போய்விடும் (நீதி. 31:30).
8. சரியானவற்றை பார்க்க கண்களும், தேவசித்தத்தை அறிய மனதும் திறந்து செயல்பட ஜெபியுங்கள்.
9. தேவ சித்தமாக இருந்தால் ஜாதி, கலாச்சார பிண்ணனியை முட்டுக்கட்டையாக வைக்காதீர்கள்.
10. வாழ்க்கையில் எல்லாம் அமைந்த பிறகு திருமணம் செய்து கொள்வேன் என்று வருஷங்களை தள்ளாமல் ஆண் என்றால் 30 வயதிற்குள், பெண் என்றால் 25 வயதிற்குள் திருமணம் முடிப்பது நன்று.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484



தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

# அறுவடை மிகுதி


## Rev. ஆ. எட்வின் பிரபாகர்

இயக்குநர், வடகிழக்கு மிஷன் இலாக்கா


TAMIL DISTRICT MISSIONS
India and beyond...

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தமிழ் பிரதேச மிஷன் ஊழியங்களுக்காக ஜெபித்து, தாங்கி, இணைந்து செயல்படும் போதகர்கள், சபை மக்கள் அனைவருக்கும் மிஷன் இலாக்காவின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாத பரிபூரண ஜீவன் மடல் மூலமாக பின்வரும் தேவச் செய்தியை பகிர்ந்து கொடுக்க உதவி செய்த தேவாதி தேவனுக்கு மகிமையுண்டாவதாக.

மத்தேயு சுவிசேஷம் 9-ஆம் அதிகாரம் 36 முதல் 38 வசனங்களை கவனித்து வாசித்து பாருங்கள். தேவ வேலைக்காக இயேசு கிறிஸ்துவிடம் இருந்து கற்றுக்கொண்டு நாம் பாரப்பட வேண்டிய மூன்று காரியங்களை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். 2022-ஆம் ஆண்டு இந்திய தேச முழுவதும் சுவிசேஷ வேலைக்கு தடைகளும், தேவ வேலைச் செய்பவர்கள் சந்திக்கும் சவால்களும், போராட்டங்களின் பெருக்கமும் பெருகியுள்ள இக்கால கட்டத்தில் ஊக்கமாய் ஜெபித்து, தளர்ந்திடாமல் சுவிசேஷ பணியை முழுவதும் செய்ய தேவன் நம் இதயக்கதவை தட்டி எழுப்புவாராக. நாம் வாசித்த வேதபகுதியில் இயேசு கிறிஸ்து தாம் உலகில் ஊழியம் செய்த நாட்களில் தேவ வேலையைச் செய்த விதத்தைப் பாருங்கள்!

### திரளான ஜனங்களின் மேல் கவனம் நிறைந்த இயேசுவின் அன்பான கண்கள்

மத்தேயு 9:36-யைப் பாருங்கள்! இயேசு திரளான ஜனங்களைக் கண்டார்! மிஷனெரி பணியில் ஒதுங்கிடாது திரளான ஜனங்களை கண்டபொழுது இயேசு அன்போடு கண்ணுற்று செயல்பட்டதுபோல கோடிக்கணக்கான ஜனங்கள் நிறைந்த இந்திய தேசத்தின் ஜனத்தின் மீது தேவ அன்பு கொண்டு செயல்பட தேவன் நம்மை தட்டியெழுப்புவாராக! கிறிஸ்துவின் வருகை மிக சமீபமாக உள்ள இக்கடைசி காலத்தில், பாவத்தின் தோஷமும், பாவக்கட்டுகளால் கட்டப்பட்டு கிடக்கும் நமது தேச ஜனங்களுக்காக, இயேசுவைப்போல அழியும் ஜனங்களின்மேல் சிந்தை வைத்து, கவனமாய் கண்ணோக்கி, தரிசனம் கொண்டு செயல்பட தேவன் நமக்கு கிருபைத் தருவாராக (மத்.9:36). இயேசுவின் நாட்களை போலவே, இன்றும் சிதறப்பட்டு, தொய்ந்து, தூரமாய் மேய்ப்பன் இயேசுவை அறியாமல் வாழும் சகல ஜனங்களையும் கண்ணோக்கி செயல்பட நம் ஒவ்வொருவரையும் தேவன் துரிதப்படுத்துவாராக! ஒரு நாள் அன்பான இயேசுவின் கண்கள் நம்மீது பட்டு நம்மை மீட்டுக்கொண்டது போல, நமது அன்பான தரிசன கண்களை தேச ஜனங்களை கண்ணுற்று கிறிஸ்துவின் மீட்புக்கு நேராக நடத்த தேவன் இன்று நம் ஒவ்வொருவருக்கும் கிருபைத் தருவாராக. பாவத்தில் அழியும் ஜனங்களுக்காக இயேசுவின் அன்பான தரிசன கண்களை தேவன் நமக்கு தருவாராக!

### திரளான ஜனங்களின் மேல் பாரம் நிறைந்த இயேசுவின் மனதுருக்கமான இருதயம் (மத். 9:36).

இயேசுவின் தரிசன கண்கள் அழியும் ஜனங்களின் மேல் இருதய மனதுருக்கமும், பாரத்தையும் கொண்டு வந்தது. இன்று கிறிஸ்துவுக்குள் வாழும் நாம் இயேசு இல்லாமல் வாழும் இந்திய தேச மக்கள் மீது கண்ணோக்கம் மாத்திரமல்ல, மனதுருகி ஏதாவது நான் செய்ய வேண்டும் என்ற பாரம் நிறைந்த இருதயம் நமக்கு உண்டா? இன்றாகிலும் நாம் கேட்டு பெற்று இயேசுவைப் போல் மனதுருக்கமான

இருதயத்தோடு செயல்படுவோமாக! பவுல் அப்போஸ்தலன் தன் நாட்களில் ஜனங்களின் நிலை அறிந்து பார்த்தபோது, இருதய மனதுருக்கம் பெற்று இப்படி சொல்கிறார், II கொரி. :5:14ன் படி கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. II கொரி.5:15 கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம். IIகொரி.5:18,19,20 ன்படி சகல ஜனங்களையும் தேவனோடு ஒப்புவிக்க அர்ப்பணித்த தோடு, மனதுருக்க இருதயத்தோடு பூரணமாய் தேவ சேவையைச் செய்ததைப் பார்க்கிறோம். ரோம சாம்ராஜ்யம் கிறிஸ்துவினால் அசைக்கப்பட்டதையும் பார்க்கிறோம். இன்றும் இந்தியாவின் ஜனங்களுக்காக அதே மனதுருக்கம் நிறைந்த இருதயத்தோடு நாம் செயல்பட்டால் நம் பாரத தேசமும் கிறிஸ்துவைக் காணும். கிறிஸ்துவினால் நிரப்பும். எழுப்புதல் காணும்.

**திரளான ஜனங்களின் மீட்புக்காக சீஷர்களிடம் சுவிசேஷ வேலை செய்ய பார்த்த இயேசுவின் வாய்ச் சொல் கட்டளை**

திரளான ஜனங்களின்மேல் கண்ணுற்ற இயேசு, மனதுருக்கத்தோடு இருதயத்தில் பாரப்பட்டு, சீஷர்களை நோக்கி வாய்மொழி கட்டளையிட்டு தேவ வேலை செய்ய, வேலையாட்களை எழுப்ப வேண்டிய அவசியத்தை இவ்வசனங்களில் சுட்டிக் காட்டுகிறதைப் பார்க்கிறோம். அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப வேண்டும் என்பதே அவர் கட்டளை. ஜெபிக்க அறிவுறுத்துவதின் பிரதான நோக்கம் சீஷர்கள் உடனடியாய் நிலை உணர்ந்து வேலை செய்ய எழும்ப வேண்டும் என்பதே. அதே கட்டளையை தேவன் இன்று நம் ஒவ்வொருவருக்கும் கட்டளையிடுகிறார். இந்தியாவின் ஜனங்களுக்காக சுவிசேஷத்தை அறிவித்திட, ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண, சபைக் கட்ட எழுப்பப்படுவீர்களா? தாமதமின்றி இன்றே இறை வேலைக்கு நம்மை அர்ப்பணித்து எழும்பி செயல்படுவோமாக! ஏசாயா 6:8,9 இல் ஏசாயா தீர்க்கதரிசிக்கு அசுத்த உதடுகளோடு உள்ள ஜனங்களை தரிசனத்தில் காண்பித்தவர், ஏசாயாவே நீ சுத்திகரிக்கப்படுவது மாத்திரமல்ல, அனைவரின் சுத்திகரிப்புக்கு சுத்திகரிக்கப்பட்டவர்கள் பணி செய்ய அர்ப்பணித்து எழும்பிட வேண்டும் என்ற பாரம் கொடுத்து, ஏசாயாவை அர்ப்பணிக்க வைத்தார். ஏசா.6:8: இதோ அடியேன், என்னை அனுப்பும் என்று ஏசாயாவும் அர்ப்பணித்து கிறிஸ்துவுக்காக எழும்பி பிரகாசித்தார். நாமும் வட இந்திய மாநிலங்களுக்காக அர்ப்பணித்து எழும்பி பிரகாசிப்போமாக! நம் மூலம் தரிசு நிலங்கள் செழிப்பான வயல் வெளியாய் மாறும். சகல ஜனங்களும் இயேசுவைப் காண்ப்பிப்பார்கள், எழுப்புதல் தேசத்தில் உண்டாகும். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! ஆமென். நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!**

1. வட மாநிலங்கள் எழுப்புதல் காண.
2. நமது மிஷன் பொறுப்பாளர்களை தேவன் பயன்படுத்த.
3. வட மாநில மிஷனெரி குடும்பங்களின் பாதுகாப்பிற்காக.
4. எழுப்புதலின் பத்தாண்டு திட்ட மிஷனெரிகள் இலக்குகள் நிறைவேற, புதிய மிஷனெரிகள் எழும்பிட.
5. தேசம் முழுவதும் திறந்த வாசலை தேவன் மிஷனெரிகளுக்கு தர.
6. மிஷன் ஊழிய தேவைகள் சந்திக்கப்பட.
7. நாம் மிஷன் பிரயாணங்கள் சென்று ஜெப நடை ஊழியங்கள் செய்ய தேவன் கிருபை தர.
8. ஒவ்வொரு மண்டலமும் வடமாநிலங்களில் வருடத்திற்கு ஒரு இடம், சபை கட்டிடம், கட்டி கொடுக்க முன் வர.
9. மிஷன் ஊழியத்தில் மாபெரும் பயனைக் காண.
10. மிஷன் ஊழியத்தில் பங்கு பெறுபவர்கள், தாங்கும் விசுவாசிகள், போதகர்கள், சபைகள் ஆசீர்வதிக்கப்பட.

தமிழ்பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்

# ...கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்


Rev. D. சாலமோன்

President, Christ's Ambassadors




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

மனுக்குலத்திற்கு தேவன் இயற்கையாக கொடுத்த ஆசீர்வாதத்தில் ஒன்று தூக்கம். மனது, உடல் உறுப்புகள் அனுதினமும் சீராக இயங்கிட தூக்கத்தை தேவன் கொடுத்திருக்கிறார். யாக்கோபு நித்திரையில் தேவனுடைய வார்த்தையையும், வாக்குத்தத்தங்களையும் பெற்றுக்கொண்டான். ராஜாவாக ஆட்சிசெய்த பார்வோன், நேபுகாத்நேச்சார் நித்திரையில் எதிர்காலத்தை குறித்த தரிசனங்களை கண்டார்கள். தூக்கத்தை ஆசீர்வாதமாக கொடுத்த தேவன் நித்திரை மயக்கத்தை குறித்து எச்சரிக்கிறார்.

கர்த்தர் தமக்குப் பிரியமானவர்களுக்கு நித்திரை அளிக்கிறார். ஆனால் நித்திரை மயக்கம் ஆபத்தானது. இயேசு தமது சீடர்களை கெத்செமனே தோட்டத்தில் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்று கூறினார். சீடர்களால் ஒரு மணி நேரம் கூட விழித்திருக்க முடியவில்லை, இயேசு தம் சீடர்களை நித்திரை மயக்கமுடையவர்களாகக் கண்டார்.

வாலிபர்களே! நீங்கள் நித்திரை மயக்கமுள்ளவர்களாக இருப்பீர்களானால் நீங்கள் பிரகாசிக்கும்படி விழித்து எழும்பும்படி தேவன் எச்சரிக்கிறார்.

## விழிப்புணர்வுள்ளவனாயிரு

வாலிபர்களே! நீங்கள் வாழும் வாழ்வின் சூழ்நிலைகளில் நடக்கிற காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கிறீர்களா? சங்கீதம் 3:5;4:8 ஆகிய வசனங்களில் தாவீது, நித்திரை செய்தேன், விழித்துக்கொண்டேன்... நீர் ஒருவரே என்னை சுகமாய் தங்கப்பண்ணுகிறீர் என்று கூறுகிறார். நான் படுத்து நித்திரை பண்ணினேன். என் இதயமோ விழித்திருந்தது என்று கூறுகிறார்.

வேதத்தில் சிசெரா என்கிற ராஜா யுத்தத்தில் தோற்று, உயிருக்கு பயந்து, தன் வாழ்வின் நிலையை உணராமல், ஆயாசமாய் தூங்கினான். அவன் மரித்துப்போனான் (நியா.4:21). தன் வாழ்வை இழந்துபோனான். எனவே வாலிபர்களே! நம் வாழ்வை இழக்கச்செய்யும் பிசாசின் தந்திரங்களைக் குறித்து விழிப்புணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்மையும் அறியாமல் நம் நேரத்தை திருடுகிற, வாழ்வின் நோக்கத்தை திருப்புகிற, நம்மைப் பாதிக்கிற காரியமாக வலைதளம் (Internet) உள்ளது. தற்போது இந்த வலைதளம் நமது ஜெபம், வேதவாசிப்பு, இரட்சிப்பு என்ற மேலானவைகளை இழக்க செய்துவிடும் ஆயுதமாக மாறி வருகிறது.

உன்னை இரட்சித்த தேவன் உனக்குக் கொடுத்த ஆயுதங்களை நீ இழந்துவிடாதே. விழிப்போடு நீ இருந்து தேவன் நம்மிடம் கொடுத்திருக்கிற பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக உன் வழிகளை சரிபடுத்திக்கொள். உன் வாழ்வை தொலைத்துவிடாதபடி வேதவசனம் உன்னை காத்துக்கொள்ளும். கர்த்தருடைய வசனம் நம்மை திருத்துகிறது, வழிநடத்துகிறது. உன் நிகழ்கால வாழ்வில் என்ன நடக்கிறது என்பதை அறியாமல் வாழ்வாயானால் எல்லாம் இழக்க நேரிடும். எனவே விழிப்புள்ளவர்களாய் இருக்கவேண்டும். நித்திரை மயக்கமாக இருந்துவிடாதே.

### சுறுசுறுப்பாயிரு

சோம்பேறியாய் இருப்பவனுக்கு எந்த வேலையும் செய்ய விருப்பமிராது (நீதி.22:13;26:13). எறும்பு சிறிய உயிரினம். அது சுறுசுறுப்பு, ஞானத்திற்கு உதாரணமாய் திகழ்கிறது. (இந்த) சோம்பல் தரித்திரத்தையும், வறுமையையும் கொண்டுவந்து உன்னுடைய தரத்தைக் குறையச் செய்துவிடும். நித்திரை மயக்கம் என்ற சோம்பேறித்தனத்தை ஆண்டவர் எச்சரிக்கிறார்.

### முன்னுரிமை கொடுத்திடு

இஸ்ரவேல் ஜனங்கள் எதிரியை ஜெயிப்பதற்கு ஆயுதங்கள் தங்களுக்கு வேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல் ஆயுதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்தார்கள் (1சாமுவேல்13:19). அவர்களுக்கு எதிர்காலத்தைக் குறித்த ஆயத்த சிந்தனை வரவில்லை. நிகழ்காலத்திற்காகவே முழு கவனத்தை செலுத்தினார்கள். தேவனுக்கு தர வேண்டிய முன்னுரிமை தவறும்போது அடிமைத்தனம் வருகிறது. கர்த்தருடைய ஆவியானவர் இந்த பெலிஸ்தியாவின் ஆவி நம் வாழ்க்கையில் ஊடுருவி வராமல் பாதுகாப்பாராக.

தூங்குகிறவர்களாக அல்ல, சுறுசுறுப்பு உள்ளவர்களாக, கர்த்தருக்கு முன்னுரிமை கொடுப்பவர்களாக நம்மை உயிர்ப்பிக்க விரும்புகிறார். யோனாவைத் தட்டி எழுப்பினார். பேதுருவைத் தட்டி எழுப்பினார். அன்று உதவி செய்த ஆண்டவர் உனக்கும் உதவி செய்வார். உன்னை வெற்றி யடையவிடாமல் தடுத்து நிறுத்துகிற காரியங்களை தேவ பெலத்தோடே கண்டறிந்து, ஜெபத்தில் (ரோமர்12:1,2), வேதத்தில் (யோவான்8:31), ஐக்கியத்தில் (எபிரெயர் 10:25), அழைப்பில் (1கொரி.7:20,24), விசுவாசத்தில் (அப்.14:22), தீர்மானத்தில் (தானியேல் 1:8).

ஆகிய இவைகளில் நீங்கள் முன்னேற பரிசுத்த ஆவியானவர் துணை செய்வாராக. வாலிபர்களே, சவால்கள் நிறைந்த வாழ்வில், தேவ பெலத்தோடு நாம் எழும்புவோம். முன்னேறிடுவோம். ஏசாயா 60:1-3 வசனங்களின்படி கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. உன் வெளிச்சத்தினிடத்திற்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள்.

இந்த சந்ததியில் தூங்குகிறவர்களாக அல்ல, நித்திரை மயக்கத்தில் இருக்கும் வாலிபனாக இல்லாமல் பயபக்தி உள்ளவனாக வாழ கர்த்தர் உன்னை பலப்படுத்துவாராக.



# தேவ சித்தம் அறிவது எப்படி?


## Rev. R. நெல்சன் ஞானகுமார்

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.


நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள் (எபேசியர் 5:17).

**1. தேவசித்தத்தை செய்வதன் அவசியம் :**

i. தேவ சித்தமே சிறந்த ஆசீர்வாதம் : தேவன் நாம் நடக்க வேண்டிய பாதையை முன்னதாக ஆயத்தம் பண்ணியிருக்கிறார். (எபிரெயர் 12:1; எபேசியர் 2:10; 1 கொரிந்தியர் 2:9) தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு நேர்த்தியானதையே ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார் (சங்கீதம் 16:6) இதனால் தேவ சித்தத்தை மீறுவோமானால் சிறந்ததை இழந்து விடுவோம்.

ii. தேவ சித்தமே நம்மை பரலோகம் கொண்டு செல்லும் (மத்தேயு 7:21; 1யோவான் 2:17).

iii. தேவ சித்தம் செய்வோரே இயேசுவின் சகோதரனும், சகோதரியுமாவார் (மத்தேயு 12:50).

iv. தேவ சித்தம் செய்ய வேண்டும் என்பது தேவ கட்டளை (எபேசியர் 5:17)

**2. தேவ சித்தத்தை கண்டுபிடிப்பதற்கான நிபந்தனைகள் :**

i. **சுய புத்தியின் மேல் சாயாதிருத்தல்:** (நீதிமொழிகள் 3:5,6) - நம்முடைய ஞானம், அறிவு குறைவுள்ளது; உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது (1 கொரிந்தியர் 3:18,19). தேவனோ ஞானிகளுக்கெல்லாம் ஞானியாயிருக்கிறார். முக்காலமும் அறிந்தவர். எனவே உங்கள் அறிவுக்கு நலமாய் தோன்றுகிறவற்றை தெரிந்தெடுத்து தேவனது மிகச்சிறந்த ஆசீர்வாதத்தை இழந்து விடாதிருங்கள்.

ii. ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிதல்: முதல் அடியை எடுத்து வைக்காமல் இரண்டாவது அடியை தேவன் காண்பிப்பதில்லை.

iii. தேவ சித்தம் எதுவானாலும் ஏற்றுக்கொள்ள ஆயத்தம்.

iv. **புதிதாக்கப்பட்ட மனது:** (ரோமர் 12:2): இரட்சிக்கப்படும் முன்பு உலகத்தாரைப் போல் சிந்தித்தோம், செயல்பட்டோம். இரட்சிக்கப்பட்ட பிறகு ஆண்டவருடைய சித்தத்தை செய்ய வேண்டுமானால் வேத வசனத்திற்கு ஒப்பாக நமது மனம் மறுரூபமாக வேண்டும்.

**3. தேவ நடத்துதலுக்கான வாக்குத்தத்தங்கள்**

“நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்” (சங்கீதம் 32:8).

“கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன்

ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்" (ஏசாயா 58:11).

"நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசாயா 30:21).

**4. தேவ சித்தத்தை காண்பதற்கான வழிமுறைகள்:**

i. **வேத வசனமே தேவ சித்தம்**: 2 தீமோத்தேயு 3:16,17: வேத வசனம் தேவனுடைய வார்த்தையாகும். தேவன் விரும்புகிறதை வேத புத்தகத்தில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

ii. **உள்ளான சாட்சி**: (ரோமர் 8:16; அப்போஸ்தலர் 8:29; 15:29): ஒரு காரியத்திற்காக அதிக நேரம் காத்திருந்து ஜெபிக்கும்போது பரிசுத்தாவியானவர் நமது ஆவியில் ஒரு உந்துதலை அல்லது ஏவுதலை தருகிறார். தேவனுக்கு சித்தமில்லாத விருப்பங்கள் குறைந்து போகும். தேவனுக்கு சித்தமானவை உள்ளத்தில் ஓங்கி நிற்கும். ஆனால் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட வேத வசனத்திற்கு விரோதமாக ஆவியானவர் ஒருபோதும் ஏவுதலை தரமாட்டார்.

iii. **தேவ சமாதானம்** : (கொலோசெயர் 3:15) நன்றாக ஜெபித்துவிட்டு ஒரு காரியத்தை செய்ய தீர்மானிக்கும்போது உள்ளத்தில் நிறைவான சமாதானம் இருந்தால் அது தேவசித்தம் என உறுதிப்படுத்தலாம். மாறாக சமாதானம் கெடுமானால் நீங்கள் செய்யும் காரியத்தை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

iv. **சூழ்நிலைகளின் சாட்சி**: நாம் தேவ சித்தத்தை மட்டுமே செய்ய வேண்டும் என்பதில் கவனமாயிருக்கும்போது ஆண்டவர் சூழ்நிலைகளை மாற்றியமைக்கிறார். தேவனுக்கு சித்தமில்லாத காரியங்களை தடைபண்ணுகிறார். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கேதுவான சூழ்நிலைகளை கொண்டு வருகிறார். ஆனால், அதே வேளையில் பிசாசும் சூழ்நிலைகளை அவனுக்கு சாதகமாக மாற்ற வாய்ப்பிருக்கிறது.

**உதாரணங்கள்:**

- எருசலேமில் உபத்திரவம் ஏற்பட்டபடியினால் சீஷர்கள் அன்றைய ரோம உலகம் முழுவதும் சிதறப்பட்டார்கள். இதனால் சுவிசேஷம் பரவியது. பூமியின் கடைசிபரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்ற தேவ சித்தம் நிறைவேறியது (அப்போஸ்தலர் 8:1; 1:8)
- அதோணிராம் ஜட்சன் என்ற மிஷனரி அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு கப்பலில் வந்தார். ஆனால் அவர் இந்தியாவில் தங்குவதற்கு அனுமதிக்கப்படாததினால் மறு கப்பல் ஏறினார். அது பர்மா சென்றது. எனவே அவர் வாழ்நாள் முழுவதும் பர்மாவில் ஊழியம் செய்து அநேக சபைகளை ஸ்தாபித்தார். வேதத்தை பர்மீய மொழியில் மொழிபெயர்த்தார்.

iv. **தீர்க்கதரிசனம், சொப்பனம், தரிசனம்:** (அப்போஸ்தலர் 16:9,10; 13:1,2).

ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்தை உறுதிப்படுத்த, தீர்க்கதரிசனத்தின் மூலமாய் கர்த்தர் பேசலாம். சொப்பனம், தரிசனம் மூலமாயும் கர்த்தர் தமது சித்தத்தை உறுதிப்படுத்தலாம். கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

## ஊழிய அழைப்பு பெற்ற பெண்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)

திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |

2022 - 2023-ம் கல்வியாண்டிற்கான மாணவியர் சேர்க்கை நடைபெற்று கொண்டிருக்கிறது.
விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டிய இணையதள முகவரி
www.trinitybiblecollege.in

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர வேண்டிய
**கடைசி நாள் : மே 30, 2022**

தொடர்பு : The Registrar
**Trinity Bible College**
Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 99942 47117, 75985 43752



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை


ஹாய் குட்டீஸ் எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? கடந்த மாத இதழில் வெளியான சிறுவர் கதையை வாசித்து பலர் உங்கள் கருத்துக்களை தெரியப்படுத்தினீர்கள். அவைகளுக்காக தேவனை துதிக்கிறேன். இந்த மாதமும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு உண்மை சம்பவத்தை மையமாக கொண்டு உங்களுக்கு கதை கூற விரும்புகிறேன். கதை கேட்க ஆயத்தமா? வாங்க போகலாம்...

ஜெர்மனியில் மிகவும் குளிரான இரவில் கன்ராடு என்பவரும் அவரது மனைவி உருசுலாவும் தங்களது ஒரே மகன் மரித்ததினால், மிகவும் துக்கத்தோடு அந்த குளிரான இரவைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்த இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு வெகு தூரத்திலிருந்து ஒரு சிறுவன் பாடும் குரல் கேட்டது. அந்த கடும் குளிரையும் பொருட்படுத்தாது எந்த சிறுவன் பாடுகிறான் என யோசித்துக்கொண்டே கணவரும் மனைவியும் குரலொழித்த திசையை நோக்கி விரைந்து சென்றனர்.

அங்கே ஒரு ஆதரவற்ற சிறுவன் கிழிந்து போன உடையுடன், கடும் குளிரில் உறைந்த நிலையில் பாட்டுப்பாடி பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். அவன் பாடுவதைக் கேட்ட அத்தம்பதியினர், அந்த அழகிய குரல் இந்த கடுமையான குளிரில் பாடினால் கெட்டுவிடுமே எனறு எண்ணி, அச்சிறுவனை தங்கள் வீட்டிற்குள் அழைத்தனர். கந்தைகளையும் அழுக்குத் துணிகளையும் அணிந்து, குளிரில் நடுங்கியபடி இருந்த அந்த சிறுவனின் கரத்தினை இறுக பிடித்துக்கொண்டு தங்கள் வீட்டிற்கு அழைத்து சென்றனர்.

அவனை அனலான ஓர் இடத்தில் அமர வைத்து, தங்களது மரித்த மகனின் ஞாபகார்த்தமாக அவனது உடைகளை சிறுவனிடம் கொடுத்து அணியச்செய்து, சாப்பிட ஆகாரமும் கொடுத்தார்கள்.

சாப்பிடும்போது அச்சிறுவன், தனது தந்தை மிகவும் ஏழ்மையானவரென்றும், தனக்கு உடையோ உணவோ கொடுக்க இயலாதவர் என்றும் கண்ணீர்மல்க கூறினான். இதைக்கேட்ட அந்த தம்பதியினரின் இருதயம் நெகிழ்ந்தது. தங்கள் மகனின் படுக்கையில் படுக்க வைத்தனர். அவன் தூங்கிய பிறகு, அவர்கள், தங்களது மரித்த மகனுக்கு பதிலாக அச்சிறுவனை தத்தெடுத்துக்கொள்ள முடிவு செய்தனர்.

அடுத்த நாள் காலையில் அச்சிறுவன் எழுந்தபோது, தங்கள் முடிவை அவனிடம் தெரிவித்தபோது, அவன் மிகவும் சந்தோஷப்பட்டு, சம்மதித்தான். அவர்களை அப்பா, அம்மா என அழைத்தான். அவர்களோடு கூட தங்கினான். அவர்களும் அவனை தன் மகனாகவே பார்த்து, ஒரு குறைவின்றி படிக்க வைத்தனர். பின்னர் தேவனுக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்ற தேவ அழைப்பை உறுதி செய்து தன் விருப்பத்தை பெற்றோரிடம் கூறவே அவர்களும் சம்மதித்து பாதிரியார்கள் பயிலும் வேதாகம பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்கள்.

அனாதையாக, கடும் குளிரில் உயிருக்கு போராடிய தன்னை இத்தனை ஆண்டுகள் பராமரித்து வந்த பெற்றோருக்கு கண்ணீர் மல்க நன்றி கூறி இறைப்பணியில் காலடியெடுத்து வைத்தார். அந்த பாதிரியாரின் பெயர் என்ன தெரியுமா? அவர் தான் மார்ட்டின் லூத்தர். அவரை புராட்டஸ்டண்ட் திருச்சபைகளின் தந்தை. விசுவாச வீரன், புரட்சி போதகர் என பல்வேறு அடைமொழிகள் கொடுத்து இன்றளவும் அவரை நினைகூறுகின்றனர். திருச்சபை சரித்திரம் படிக்கும் ஒவ்வொருவரும் இவரது பெயரை நிச்சயம் அறிந்திருப்பார்கள்.

உலகத்தை கலக்கிய மார்ட்டின் லூத்தர் இன்றளவும் பேசப்பட முக்கிய காரணியாக இருந்த தம்பதியர் பாராட்டப்பட வேண்டியவர்கள் அல்லவா?

பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு.25:35,40) என்று இயேசு கிறிஸ்து கூறிய அற்புதமான வாழ்க்கை பாடத்தை இங்கு நினைவுபடுத்துகிறேன்.

அன்பான தம்பி, தங்காய் ஒருவேளை நீங்கள் நினைக்கலாம். நான் சிறுபிள்ளை என்னால் எப்படி பிறருக்கு உதவ முடியுமென்று? எப்படியெல்லாம் உதவ முடியுமென கூறுகிறேன்.

உனக்கு கிடைக்கிற கொஞ்சம் பணத்தில் ஒரு பகுதியை சேமித்து வைத்து, உண்மையாகவே தேவையுள்ள உன் நண்பருக்கு கல்வி கட்டணம் செலுத்தலாம், தினம் தினம் பழைய ஆடையணிந்து வரும் உன் நண்பருக்கு உன் பெற்றோரின் துணையோடு ஒரு ஆடை வாங்கி கொடுக்கலாம். நடக்க இயலாதவர்கள், பார்வையற்றவர்களுக்கு உதவி செய்யலாம். பேருந்தில் அமர்ந்து பயணம் செய்யும்போது உன்னருகே ஒரு வயோதிபர் அமர இடமின்றி சிரமப்படுவதை பார்க்கும்போது அவர்களை அமரவைத்து அழகு பார்க்கலாம். இப்படியாக உன்னால் இயன்றமட்டும் பிறருக்கு உதவியாக இருங்கள். அப்பொழுது உங்கள் மூலமும் மார்ட்டின் லூத்தர்கள் போன்ற ஊழியர்கள், உயர் அதிகாரிகள், பெரும் தலைவர்கள் உருவாவது நிச்சயம்.

நன்மை செய்ய நமக்கு திராணியிருக்கும்போது, அதை செய்யத்தக்கவர் களுக்கு செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம். அது கர்த்தருடைய பார்வையில் பிரியமானது அல்லவா? ஒருவருடைய அத்தியாவசிய தேவையில் நாம் உதவும்போது, அவர்கள் இருதயம் நன்றியுடன் தேவனை துதிக்கும். அதன் ஆசீர்வாதம் நமது மேலும், நமது குடும்பத்தார் மேலும் என்றென்றும் நிற்கும் அல்லவா?

“அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள், அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு” (எபிரெயர் 13:2).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்... டாட்டா...



# தவறுகள் (Mistakes)


## Rev. பெகின் சாமுவேல்

(AGCM Director)


ஆண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு வாழ்த்துதலை தெரிவிக்கிறேன். தேவனுடைய பெரிதான கிருபையினாலும், இரக்கத்தினாலும் இந்த இதழ் மூலமாக தேவன் உங்களை சந்திக்க செய்த மகாபெரிய தயவுக்காக அவரை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன்; இந்த இதழிலும் பெற்றோர்களுக்கு 'தவறுகள்' என்ற தலைப்பில் சிலகாரியங்களை குறித்து எழுதுகிறேன். அது உங்கள் பிள்ளைகளை சரியான பாதையில் நடத்த உங்களுக்கு உதவும் என்று நம்புகிறேன். தவறு செய்வது மனித இயல்பு. இவ்வுலகத்தில் பிறந்தவர்களில் தவறுசெய்யாதவர்கள் என்று ஒருவருமில்லை. எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி... ரோமர் 3:23) என்று வேதம் கூறுகிறது. Not all mistakes are sins, but all sins are mistakes. பொதுவாக ஒருதவறு அடுத்த தவறுக்கு அஸ்திபாரமாக மாறிவிடுகிறது. எனவே நம் தவறுகளை பற்றி மிக கவனமாக இருக்க வேண்டும். பொதுவாக, மூன்று சூழ்நிலைகளினால் பிள்ளைகள் தவறு செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

### 1.தவறை வற்புறுத்தலினால் செய்கிறோம் (By the compulsion)

ஆதாம் பாவம் செய்த பொழுது, தேவன் அவனைப் பார்த்து கேட்டார். 'புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ?' என்றார் (ஆதி.3:11). அப்பொழுது ஆதாம் தன் தவறை ஒத்துக்கொண்டு மன்னிப்பு கேட்டானா என்றால் இல்லை. அவன் அந்த தவறை தன் மனைவியாகிய ஏவாளிடமாக திருப்புகிறான். அவளுடைய வற்புறுத்தலினால் தான் நான் புசித்தேன் என்கிறான். ஏவாளோ, மீண்டும் இன்னொருவர் மேல் குற்றஞ்சாட்டுகிறாள். 'சர்ப்பம் என்னை வஞ்சித்தது நான் புசித்தேன்' என்றாள் (ஆதி. 3:13).

யோசேப்பு என்றொரு வாலிபன் இருந்தான். அவன் தன் எஜமானுடைய மனைவியினால் பாவஞ்செய்ய கட்டாயப்படுத்தப்பட்டபோது அவன் அந்த இடத்தைவிட்டே ஓடிப்போனான். ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொண்டான்.

### 2. தவறை விருப்பத்தினால் செய்கிறோம் (To fulfill our desires)

சிம்சோன் நசரேய விரதத்திற்கு என்று தேவனால் முன் குறிக்கப்பட்டவன். தேவஆவியினால் நிரப்பப்பட்டவன். ஆனாலும், தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள விரும்பி நசரேய விரதத்தை மீறி தன்னுடைய அபிஷேகத்தை இழந்துபோனான். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள். அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான் (நியா.14:3).

தாவீது ராஜா தன்னுடைய விருப்பத்தினால், தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள பத்சேபாளினிடத்தில் தவறு செய்தான். அந்த தவறு அவனை அடுத்த தவறுக்கு நேராக நடத்திசென்றது. ஆனாலும் தேவமனிதன் நாத்தான் அவனுடைய பாவத்தை சுட்டிக் காட்டினபோது நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன் (2சாமு.12:13) என்று ஒத்துக்கொண்டான்.

இந்த நாட்களில் சிறுவர்கள் மொபைல் போன், TV போன்றவைகளுக்கு அடிமையாகி இருக்கிறார்கள். அதில் வரும் கார்டூன்கள், கேம்ஸ் ஆகியவற்றை விரும்பி பார்க்கிறார்கள். விளையாடுகிறார்கள். அதனால் ஏற்படும் விளைவுகளை அறியாமல் தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற மணிக்கணக்காய் நேரத்தை செலவிடுகிறார்கள்.

### 3. தவறை வெறுத்து செய்கிறோம் (Doing with hating)

அநேக நேரங்களில், நாம் தவறு என்று நினைத்து எதை செய்யக்கூடாதென்று தீர்மானிக்கிறோமோ, அதே தவறை மீண்டும் மீண்டும் செய்கிறோம். பவுல் எழுதுகிறார். 'ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்' (ரோமர் 7:19).

மேலே குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தவறுசெய்யாமல் இருக்க நம்மாலும், நம்முடைய பிள்ளைகளாலும் ஒரு வேளை இயலாதிருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினால் செய்யமுடியாதவைகள் இல்லை. நாம் பாவத்தை மேற்கொள்ள எளிதாக இயலும். எனவே ஆவியானவரை வாஞ்சிப்போம். அவர் கொடுக்கும் உன்னத பலத்தினால் நிரப்பப்படுவோம். ஆமென்.

நமது தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியங்கள் சார்பாக கர்த்தருக்கு சித்தமானால், வருகிற கோடை விடுமுறை நாட்களில் ஐந்தாவது ஆண்டாக **AGVBS** நேரடியாக நடத்த தீர்மானித்து, அதற்கான பணிகள் முழு வீச்சாக நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் உங்கள் பிள்ளைகளை '**தங்கநகரம்-Golden City'** என்ற தலைப்பில் சந்திக்க இருக்கிறோம். இதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இந்த வருடத்திற்கான பைபிள் சாம்பியன்ஸ் வேதபகுதி 'அப்போஸ்தலர்'என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளை இப்போதிலிருந்து ஆயத்தப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். தொடர்ந்து நீங்கள் சிறுவர் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். தேவகிருபை நம்மனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

---

## அகில உலக அசெம்ப்ளி ஆப் காட் சபைகள் ஓர் பார்வை

1914 ஆம் வருடம் அமெரிக்காவிலுள்ள ஆர்கான்சஸ் மாகாணத்தில் உள்ள ஹாட்ஸ்பிரிங்ஸ் என்னுமிடத்தில் ஒரு சில நூற்றுக்கணக்கான விசுவாசிகளோடு ஆரம்பிக்கப்பட்ட ஏஜி சபைகள் இன்று உலகளாவிய அளவில் பெரிய பெந்தெகொஸ்தே சபையாக வளர்ந்துள்ளது.

**உங்கள் பார்வைக்கு சில புள்ளிவிவரங்கள்!**

1. உலகம் முழுவதும் ஏஜி ஸ்தாபனத்தில் 6.9 கோடி விசுவாசிகள் உள்ளனர். அப்படியென்றால் உலகில் உள்ள மக்களில் 100ல் ஒருவர் ஏஜி சபை விசுவாசி..
2. ஒவ்வொரு 95 நிமிடத்திற்கும் உலகில் ஏதேனும் ஒரு இடத்தில் ஓர் ஏஜி சபை ஆரம்பிக்கப்படுகிறது.
3. ஒவ்வொரு 37 வினாடிக்கும் ஒருவர் ஏதேனும் ஒரு ஏஜி ஊழியர், விசுவாசி, அல்லது ஊழியத்தின் மூலம் இரட்சிப்புக்குள் நடத்தப்படுகின்றனர்.
4. 2017 ம் வருட கணக்கீட்டின் படி 3,70,000 சபைகள், ஊழிய ஸ்தலங்கள் உலகம் முழுவதும் ஏஜி ஸ்தாபனத்தின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

5. தற்போது உலகின் 252 நாடுகளில் ஏஜி சபைகள் உள்ளது..
6. உலகம் முழுவதும் 3,92,018 முழுநேர எஜி ஊழியர்கள் உள்ளனர்.
7. கடந்த 20 ஆண்டுகளில் ஏஜி சபைகள் விசுவாசிகளின் எண்ணிக்கை இருமடங்காக பெருகியுள்ளது..

உலகளாவிய சுவிசேஷ பிரபல்யம், விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்தம், கிறிஸ்தவ அறிவில் வளருதல், கர்த்தருடைய வார்த்தையை அறிவித்தல், உலகளாவிய கிறிஸ்தவ ஐக்கியம் ஆகியவை ஏஜி ஸ்தாபனம் முக்கியபடுத்தும் சில முக்கிய காரணிகள்.

இந்த ஸ்தாபனத்தில் இருப்பதற்காக சந்தோஷபடுங்கள். தேவன் தந்த பெந்தேகோஸ்தே அனுபவத்திற்காக, சத்தியத்திற்காக நன்றி சொல்லுங்கள்.

தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும், உலகம் முழுவதுலுமுள்ள அசெம்ப்ளி ஆப் காட் சபையின் தலைவர்களுக்காக ஜெபியுங்கள்.

---

## போட்டி எண் : 91 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: ராதாமணி; பிரபா; நந்தினி; S.ஜெயா; K.ராஜீ தங்கமணி; S.முத்துலெட்சுமி; கோகிலா; T.கலா; A.ஹெப்சி அன்பு; சுமதி; G.முத்துலெட்சுமி; M.எஸ்தர்; K.மஞ்சு; R.ஜெயசிலின்; தமிழ்ச்செல்வி; A.புனிதவள்ளி; தாவீது மாரிமுத்து; S.பிரேமலதா; K.சாராள்; K.பொம்மி; R.மரகதம்; T.சாந்தி; M.கனகவல்லி; ராணி பிளஸ்ஸிங், அமுதா கிட்டு; பிரியா; குளோரி; மகேஸ்வரி; R.மயில்; A.மஞ்சு; கிரிஜா; டோரா; V.பியூலா; காயத்ரி ரோஸ்லின் ஏஞ்சல்; சித்ரா பிளஸ்சி; S.சித்ரா; T.சாராள்; V.விஜி; R.பேபிகலா; S.இந்திரா; A.கிறிஸ்டி; R.மாது; R.எஸ்தர்கலா; E.கலா; K.பூங்கோதை; N.ரோஸ்லின்; C.எஸ்தர்; மாளவிகா; S.ரக்ஷனா;| **எடப்பாடி** : தீபனா; சுபா; ஜெயமேரி; மாலதி; எப்சிபா; மெர்சி; லீதியாள்; ரூத்; பாக்கியம்; ரெஜினா; பிரியா; பிளஸி; விஜயா; புஷ்பா; |**இறச்சகுளம்** : கவிதாஸ்ரீ; எஸ்தர்; கலா; நளினா ஷாலினி; ஜெஸி; ஜேஸ்மின்; கனகமணி; அமலா வேணி; அஜிதா; இந்துமதி; |**ஸ்ரீவில்லிபுத்தூர்** : நித்யா; ஆபிரகாம்; சத்யா; பாஞ்சாலி; தேவபிரியா; மெசி; கிறிஸ்டி பிரியா; நெல்சன் செல்வராஜ்; அனிதா; காபிரியேல்; குளோரி; ஜெயராணி; புஷ்பா; கோபிநாத்; |**மதுராந்தகம்** :சாந்தி; சங்கீதா; ஜெபா; சுனிதா ரோஸ்லின்; நேசம்; பிரின்ஸி; பிரின்ஸி தெபோராள்; ஹரினி மெர்லின்; ராணி; செல்வகுமாரி; கல்பனாதேவி; சுந்தரி; டோனா; | **ஆறுமுகநேரி** : இருதய ஸ்டெர்லின்; சுகிர்தா டைட்டஸ்; பானுமதி; பிரேமா; ஜாய்ஸ்மேரி; வெண்ணிலா எஸ்தர்; கஸ்தூரி; மேனகா; |**சாத்தூர்** : ஸ்டெல்லா; கீதா வசந்தகுமாரி; முத்துலெட்சுமி; சரோஜா; சங்கீதா; |**திருநின்றவூர்** : புவனேஸ்வரி; கேத்ரின்; ஏடா டாரியா; அம்மு; ஹேமலதா; எழிலரசி; முகேஷ்குமார்; ராகேஷ்குமார்; சிவராஜ்; சுமதி; மார்த்தாள்; ரோசி; |**கடையநல்லூர்** : ஆஷாதேவி; தங்கராஜ்; பெட்சன்; ஜோசப்; ஸ்டெல்லா; சாமுவேல்; செல்வி இந்திராணி; வினோலியா; | **ஆலங்குளம் (வி)** : கிருபா; ஸ்டெல்லா மேரி; திவ்யா; நித்யா; பிரேசன்; | **ஒட்டப்பிடாரம்** : பானுமதி; சரஸ்வதி; சுப்ரமணியன்; இஸ்ரவேல் கிருபாகரன்; மரியநேசம்; முத்துகுமார்; ஞானவடிவு; ராமலெஷ்மி; **தேனி** : கிருபா; ஜோதிமணி; தனம்; கார்த்திகேயாயினி; பூமணி ஜான்சி; திரவியச்செல்வி; | **புளியங்குடி** : சுந்தரி; ஜெயமணி; பால்அமுதாடெய்சி; ஞானமணி; ஜெபஞானம்; |**மதுரை** : தமிழ்செல்வி; மேரி; கனகவல்லி; நற்குணம் மேரி; சுபத்ரா; | **சென்னை** : மெர்லின் ஹெலன் பிரிதியா; நிர்மலா எஸ்தர்; ரூபா; மேரிகுட்டி மத்யூ; சந்திரா; |**தூத்துக்குடி** : கிருபா சலிகா; சகாயமேரி; சில்வெஸ்டர்; புரூசிமா; | **அச்சிறுப்பாக்கம்** : தமிழ்ச்செல்வி; திரேசா; ஜென்ஸி; கிருத்திகா; | **ஆண்டிபட்டி** : தேவபாக்கியம்; புளோரியா; ஹெலன் மார்க்கிரேட்; | **அந்தமான்** : ஜேக்லின்; ஜெயந்தி; ஸ்டெல்லாமேரி; | **திருச்சி** : சாந்தி; கிறிஸ்டி மகாலஷ்மி; மேரி சுஜாதா; சந்திரா; | **வத்ராப்** : சிவகாமி; கிரேஸ்; கல்பனா; | **நாசரேத்** : எஸ்தர்; தாசன்மோசஸ்;|**செய்துங்கநல்லூர்** : சாந்தி; வனிதா;|**இராமன்புதூர்** : லீதியாள்; அன்னம்மாள்;|**நெல்வாய்**:அமலா; பிரான்சிஸ் வேணு;|**புதுக்கோட்டை** : மின்னல்கொடி,

## போட்டி எண் : 91 (சரியான விடை எழுதியவர்கள்)

லலிதா; |**வில்லியனூர்** : செல்லப்பன்; ஷீபா; |**புதுச்சேரி**; ஆரோக்யமேரி; மீனா;| **கிருஷ்ணகிரி**: ஆனிமெர்சி; ஐடா; |**ஆல்வார்திருநகரி** : மரியாள்; இவாஞ்சலின் மரியதேவநேசம்;|**திருத்துறைப்பூண்டி** : பெனிட்டா விக்டோரியா; பென்சி தெபோராள்; |**மன்னார்குடி** : அருண்; ஷீபா; |**திசையன்விளை** : செல்வபாக்கியம்; ஜெயசீலிதாசன்; ரொபினா; |**கூவத்தூர்** : எட்வர்ட்; விஜயா; |**செய்யூர்** : ஜாய்ஸ் இவாஞ்சலின்; சாம்சன்பால்; **பரமக்குடி** : பிரியா;|**தஞ்சாவூர்** : தேவகுமார்;|**கும்பகோணம்** : மீனா;|**ஏர்வாடி** : மரகதம்; |**திருவள்ளூர்** : நாகஜோதி;|**முத்தையாபுரம்** : காபிரியேல் அந்தோணி;|**புதுச்சேரி** : குப்பம்மாள்; |**கவர்க்கல்** : சரஸ்வதி;|**விருத்தாசலம்** : மாணிக்க அரசி; சுகிர்தா;|**உவரி**:ஜேனட்;|**செட்டியார்பட்டி**: விமலாராணி;|**திருச்செந்தூர்** : தேவதாஸ்; |**கோவில்பட்டி**: வால்டர்சிங்; |**பாவூர்சத்திரம்**: ஜெசிலி; |**வெள்ளாண்டிவலசை**: ஜோசப்மேரி; |**மூக்குப்பேரி**: சுசீலா; செல்லத்தாய்ராணி;|**ஆம்பூர்** : ரூபி; கிரிஜா சத்தியா; |**சிவகாசி**; ரெஜினாசாரு; |**புதூர்** : கீர்த்தனா; |**கூவத்தூர்** : லிடியா; |**அரசாங்கநகர்** : மெர்சி; |**குனியம்முத்தூர்** : சங்கீதா;| **ஓசூர்** : பாண்டியம்மாள்; ஜெமிந்தா;|**புதுக்கோட்டை** : பெனாயா; |**கடலையூர்** : ஆபிரகாம்; |**கொங்காத்தான்பாறை** : சந்திரா;|**அகஸ்தியர்பட்டி** : பத்மாவதி; நிர்மலா; |**அரும்பாக்கம்** : அல்போன்சா; மேரி;|**மடத்துக்குளம்** : கிரேஸ்மேரி; சேர்மக்கனி; ஜீன் மெர்லின் கிருபா; |**குரோம்பேட்டை** : தாமரைசெல்வி; தமிழ்செல்வி;|**T.N.பாளையம்** : சுஜா;|**ஏரல்** : சத்யா; |**பெங்களூர்** : தேவபிரியா; |**திருவாரூர்** : கிளாமன்டினா; |**பாம்பன்குளம்** : பஸ்மத்; |**உத்திரமேரூர்** : மலர்விழி; |**கொட்டிவாக்கம்** : அஞ்சலி; |**களக்காடு** : விமலாபாய்; |**திருநெல்வேலி** : இவாஞ்சலின் சாரோன்ரோஸ்; ஜாஸ் இந்திரா; |**நெய்யூர்** : ஷீலா; |**பழனி**: பிரீத்தி; |**தர்மபுரி** : மாதம்மாள்; ரூத்; |**சின்னாளப்பட்டி** : சலோமி; **அலமாதி** : அமலா; |**காஞ்சிபுரம்** : வெஸ்லி விஜயகுமார்; |**சூளைமேடு**: அருள்மேரி; |**சேத்துபட்டு** : செல்வி; |**பெருங்குளம்** : பியூலா ஜோபாய்; |**கடாட்சபுரம்** : சுசிலா;|**நாகலாபுரம்** : சாராள்; |**ஜலகண்டாபுரம்** : கவிதா; |**பீளமேடு** : ஜீடா கிப்ட்சன்;|**நாச்சிக்குறிச்சி** : சகாயடெய்ஸி; |**ஆத்தூர்** : கிளமண்ட்;|**தேவகோட்டை** : கஜித் பிராங்கலின்; |**முத்தையாபுரம்** :பாக்யதாய்; |**கல்லல்** : அபிஷாக்;| **கவணம்பட்டி** : குளோரி; |**ஆத்தூர் (சே)** : பிளாரன்ஸ்; |**பாளையங்கோட்டை** : சாந்தகுமாரி; |**நாகமலை**: விஜிலா; |**விருதுநகர்** : ஜேசுராஜ்; |**வால்பாறை** : டேனியல்; |**தாழையூத்து** : சகுந்தலா; மெர்சி;| **அம்பை**: வளர்மதி; |**கவுந்தப்பாடி** : பிரியா; |**ஈரோடு** : ரேச்சல்;| **உத்திரமேரூர்** : ஜூலியட்; |**நீலகிரி**: சார்லஸ்; |**தென்னூர்** : ராஜேஸ்வரி;|**திண்டிவனம்** : சாராள்;அறிவுச்செல்வி;|**பள்ளிக்கரணை** : பொன்செல்வி;|**மடத்தட்டிவிளை** : கிருஷ்ணகுமாரி; |**பழையகாயல்** : வின்ஷா; எலிசபெத்; |**விருதுநகர்** : நிம்மி; தாயம்மாள்; |**குழிதலை**: கங்கா; |**கிருஷ்ணகிரி** : ரேச்சல்; |**புதியம்புத்தூர்** : தமிழ்செல்வன்;|**கடாட்சபுரம்** :ரேவதி;|**ஓசூர்** : பரிமளா;|**வடக்குகோணம்** : மரியநேசம்; |**மேலப்பாளையம்** : வனிதா; |**கோவை**:மேரி டென்சில்; கிறிஸ்டினா அபிகாயில்; |**கல்லல்**; மோனிகா;|**பெரியகுளம்** : மனோகாசி;|**விளாங்குறிச்சி** : ரித்மா; |**செங்கல்பட்டு** : தங்கமணி; |**விளாங்குறிச்சி** : கிறிஸ்டினா; |**கீழ்வேளூர்** : கிரேனாப்பு; |**ஆழ்வார்குறிச்சி**: ஹரிலீலா; |**நாகப்பட்டிணம்** ; வின்சென்ட்ராஜ்; |**சுரண்டை** : குளோரிஞானம்.

---

### போட்டி எண் -91 (யோவான் சுவிசேஷம்) சரியான விடைகள்

1.என் பிதாவின் அருளைப் பெறவிட்டால் என்னிடத்திற்கு;|2.தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து;|3.என் வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும்;|4.எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப்; |5.என்னில் அன்பாயிருந்தால் அவன் என்;|6. என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த;|7.தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச்;|8.இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால்;|9.என்னில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு;|10.ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்

## போட்டி எண் -91 (யோவான் சுவிசேஷம்) சரியான விடைகள்...

தேவனுடைய ராஜ்ஜியத்தில்;|11.தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு;|12.மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் ; |13.நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்;|14.நான் போகிறேன், நீங்கள் என்னைத் தேடி; |15.தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்; |16.வசனமே;|17.வேதத்தை;|18.மரித்தாலும்;|19.அதிபதி;20.சமாதானத்தையே; |21. காணாதிருந்தும்.

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 92

### அப்போஸ்தலருடைய நடபடிகள் இருப்பிடத்துடன் விடை எழுதவும் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | சீஷன் | - செர்கியுபவுல் |
| 2. | நியாயசாதுரியன் | - ஸ்தேவான் |
| 3. | பட்டணம் | - லீதியாள் |
| 4. | சின்னத்தீவு | - மோசே |
| 5. | கப்பல் | - யூரோக்கிலிதோன் |
| 6. | மகாதேவி | - மெலித்தா |
| 7. | பட்டாளம் | - தெமேத்திரியு |
| 8. | நேர்த்தெருவு | - கமாலியேல் |
| 9. | வாயாடி | - பேனிக்ஸ் |
| 10. | தர்சு பட்டணம் | - கிலவுதா |
| 11. | ஆறுதலின் மகன் | - எலிமா |
| 12. | கடுங்காற்று | - அகுஸ்து |
| 13. | சீஷி | - பர்னபா |
| 14. | அகாயா நாட்டு அதிபதி | - தெரு |
| 15. | நல்லவன் | - தியானாள் |
| 16. | வாக்கிலும செய்கையிலும் வல்லவன் | - அலெக்சந்திரியா |
| 17. | விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவன் | - அதிரமித்தியம் |
| 18. | கனம் பெற்ற நியாயசாஸ்திரி | - அனனியா |
| 19. | துறைமுகம் | - பிலிப்பு |
| 20. | மாயவித்தைக்காரன் | - கல்லியோன் |
| 21. | விவேகமுள்ள மனுஷன் | - தொர்த்துல்லு |
| 22. | தட்டான் | - சவுல் |
| 23. | தீவு | - தபீத்தாள் |
| 24. | சுவிசேஷகன் | - கொர்நேலியு |
| 25. | தியத்தீரா ஊர் | - பவுல் |

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 8.04.2022

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள்
தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.



### விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## Global University Graduation, Trichy 20.02.2022













## விருதுநகர் மண்டல உபவாச ஜெபம்

இடம் : மகிமை ஏ.ஜி.சபை, சூலக்கரை   நாள் 26.01.2022











Registered News Paper Regd. No. 8206 / 62







BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165